முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 ‖ 17—5—57 வெள்ளி ஒலி 4

"வேதபுரத்தாருக்கு நல்லகுறி சொல்லு!"

அன்புள்ள பொன்முடி!

நெடுநாட்களுக்குப் பிறகு நீ எழுதிய மடல் கண்டேன். மகிழ்ச்சி கொண்டேன். நீண்ட இடைவேளை கழிந்து நண்பனிடமிருந்து வருகிற ஓலையாயிற்றே; அரசியல் வினாக்களை அள்ளி அள்ளிப் போட்டிருப்பான்—சட்ட மன்ற செய்திகளைப் பற்றிய விளக்கங்களை பல்வேறு கோணங்களில் நின்று கேட்டிருப்பான் — தேர்தலுக்குப் பிறகு தென்னகத்து அரசியல் வானில் தோன்றியுள்ள மாறுதல்கள் பற்றி யெல்லாம் விமர்சனங்கள் செய்து கேள்விகளையும் தொடுத்திருப்பான்—என்றெல்லாம் எண்ணிக் கொண்டு உரையைப் பிரித்தேன். நீயோ, திரைப்பட விமர்சனத்தில் திடீரென இறங்கி விட்டாய்.

'புதையல்' படம் வெளி வந்த பிறகு எனக்குப் பல நண்பர்களிடமிருந்து கடிதங்கள் வந்தன. குறைகளையும் —நிறைகளையும் கூறித் தங்கள் கருத்துரையை வழங்கி யிருந்தார்கள்.

பராசக்தி, மனோகரா, மந்திரி குமாரி போல வசனம் அமையவில்லை யென்று குறைகூறி எழுதியிருக்கிற தோழர்கள்—முன்பு அந்த வசனங்களையே "கரடு முரடு"—"சடபுடா" என வர்ணித்தவர்கள்தான் என எனக்குள்ளேயே எண்ணிசிரித்துக் கொண்டேன். பிரியாணிக்கு வெங்காயம் போல—தயிர் சோற்றுக்கு ஊறுகாய் போல — கதைக்குத் தகுந்த வசனம் அமைப்பதே சிறப்புடையது எனப் பாராட்டி எழுதியிருக்கிற நீ, "குடு குடுப்பைக்காரன் பாட்டைப் புகுத்தியதின் நோக்கம்என்ன?" என்று கேட்டிருக்கிறாய்! இந்த ஒரு கேள்வி மட்டும் இல்லாமலிருக்குமேயானால் உன் கடிதத்தை "வெள்ளி வீதி" இதழுக்கு அனுப்பி அதிலே பிரசுரிக்கச் செய்திருப்பேன். ஏனெனில், கடிதம் என்ற பெயரில் சினிமா விமர்சனமே எழுதி விட்டாய்: அதனால்! நல்லவேளை; ஒரு கேள்வியால் தப்பினாய்!

படத்தில் வரும் குடு குடுப்பைக்காரன் பாட்டு—பாரதியார் பாட்டு என்பதை நீ அறிவாய்!

மிக மிகப் பொருத்தமான நேரத்திலேதான் அந்தப் பாடல் தமிழகமெங்கணும் இப்போது ஒலிக்கிறது என நான் எண்ணுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தார் பார்ப்பனர்களின் அடிமைகளாகி விட்டார்கள்; பார்ப்பனரை இந்த நாட்டைவிட்டு வெளியேற்றுவதைத் தடுக்கும் துரோகிகள் ஆகி விட்டார்கள்; என்றெல்லாம் நம் மீது

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அறிவியல் மேதை ஆர்க்கிமிடிஸ்

பி.சி. கணேசன் பி.எஸ்ஸி., பி.டி.

[கி.மு. 75. பிரபல ரோமானியத் தத்துவ ஞானியும் பேச்சாளருமான சிசரோ, தன்னுடைய பரிவாரங்களோடு அக்ரிஜென்டைன் வாயிலுக்கு வருகிறார். அங்கு புற்றும் புதரும் மண்டியுள்ள இடமொன்றில் செடிகொடிகளால் மூடி மறைக்கப்பட்டுள்ள கல்லறை யொன்று தென்படுகிறது. ஆவலோடு செடிகொடிகளை கூறிய வாளால் வெட்டித் தள்ளுகிறார். இப்போது கல்லறை ஒளிவாகத் தெரிகிறது. அதன் மீது உருளை போன்ற வடிவத்தின் மீது கோளம் போன்ற வடிவம் கொண்ட சின்னமொன்று காட்சியளிக்கிறது. ஆவல் அதிகரிக்க, கல்லறையின்மீது பொறிக்கப்பட்டுள்ள கிரேக்க எழுத்துக்களைப் படிக்கிறார். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் 'பொல பொல' வென்று உதிர்கிறது. மண்டியிட்டுக் கல்லறைக்கு மரியாதை செய்கிறார். உடனிருப்போர் ஒன்றும் புரியாமல் விழிக்கிறார்கள்.]

சிசரோ:—மகத்தான சாதனை நண்பர்களே! கிரேக்கத்தின் கீர்த்திமிக்க கணித மேதையின் கல்லறையைக் கண்டுபிடிக்கும் பேறு ரோமானியர்களாகிய நமக்குக் கிடைத்ததிலே பெருமையும் பூரிப்பும் அடைகிறேன். எண்ணற்ற உண்மைகளை இடையுறாத உழைப்பினால் கண்டறிந்து, அறிவியல் துறையின் முதல் அத்தியாயத்தை எழுதிய மாபெரும் மேதையின் சடலத்தைத்தான் இந்தக் கல்லறை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. இந்தக் கிரேக்கப் பெரியாருக்கு கல்லறையொன்றை உருவாக்கி, உருளைக்கும் கோளத்திற்கும் உள்ள தொடர்பை ஆய்ந்தறிந்து சொன்னதினால், அதையே சின்னமாக்கிப் பெருமைப் படுத்தின தளபதி மார்செல்லசின் பெருந் தன்மைக்கும் இந்தக் கல்லறையே சான்றாக நிற்கிறது. தன்னுடைய போர் வீரன் செய்த கொடிய செயலுக்குத் தக்க கழுவாய் தேடிக் கொண்டார் மார்செல்லஸ்...

உடன் வந்த போர் வீரர்களில் ஒருவர்:—யார் அந்த மேதை? அந்த கிரேக்க மேதைக்கு ரோமானியத் தளபதி கல்லறை ஏற்படுத்திக் கழுவாய் தேடவேண்டிய அவசியம் என்ன?

சிசரோ:—அந்தக் கணித விஞ்ஞான மேதையின் பெயர் ஆர்க்கிமிடிஸ்! கணித விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்தூன்றியவர் அவர்! விவேகம் ஒளிவிட்ட அவருடைய வாழ்க்கை சோகம் நிறைந்த மரணத்தில் முடிந்தது...... சிராக்கஸ் மன்னவன் ஹீரோவால் சீராட்டிப் பாராட்டி வளர்க்கப் பட்டான் அந்த சிந்தனைச் சிற்பி! ஹீரோவின் ஆட்சிக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் அதைத் தீர்த்துவைக்கத் தேவைப்பட்டான் ஆர்க்கிமிடிஸ்...சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன்...... மார்ச்செல்லசின் மரக்கலங்கள் சிராக்கஸ் தீவை முற்றுகையிட்டன. ஹீரோ மன்னன் செய்வதறியாமல் விழித்தான்...ஆர்க்கிமிடிசை அழைத்து வரச் செய்தான்.

★

[ஹீரோ மன்னன் மந்திரிகளும் போர்த் தளபதிகளும் புடைசூழ, கவலை தேங்கிய முகத்தோடு அங்குமிங்கும் உலாவிக் கொண்டிருக்கிறன். ஆர்க்கிமிடிஸ் உள்ளே நுழைகிறார்.]

ஹீரோ:—வாருங்கள் ஆர்க்கிமிடிஸ், வாருங்கள்! (மன்னன் ஆர்க்கிமிடிசை மார்புறக் கட்டித்தழுவிக் கொள்ளுகிறான்.) கலப்பில்லாத பொன்னால் கிரீடத்தை செய்திருப்பதாகச் சொன்ன பொற்கொல்லனின் புளுகை அம்பலப் படுத்தும் முயற்சியில் புதிய தத்துவம் ஒன்றையே உலகுக்கு அளித்தீர்கள்...இதோ, இப்பொழுது ரோமானிய மரக்கலங்கள் நாட்டை முற்றுகை யிட்டு விட்டன. முற்றுகை முறியடிக்கப் படாவிட்டால், சிராக்கஸ் சரணாகதி அடைவதைத் தவிர வேறு வழியில்லை! நீங்கள்தான் இந்த நெருக்கடிக்கு ஒரு வழி சொல்லவேண்டும்...

ஆர்க்கி:—(சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபின்,) பாய்மரக் கப்பல்கள்தானே,

தளபதி ஒருவர்:— ஆமாம், எல்லா கப்பல்களுமே பாய் மரக் கப்பல்கள்தான்...

ஆர்க்கி:— கவலை வேண்டாம் அரசே! நாளை கதிரவன் உதயத்திலிருந்து மறைவுக்குள்ளாக, முற்றுகை உடைக்கப் படும். சிராக்கஸ் மக்கள் நிம்மதியாக இருக்கலாம்....

ஹீரோ:—தளபதி, ஆர்க்கிமிடிசுக்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் செய்து கொடு... ஆர்க்கிமிடிஸ், நானும் நாடும் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம்.

ஆர்க்கி:— கடமை, அரசே, கடமை! அதிலிருந்து ஆர்க்கிமிடிஸ் எப்பொழுதும் வழுவ மாட்டான்......! நான் வருகிறேன்.

★

[மார்செல்லஸ் பாசறையில் ஆலோசகர்களோடு வீற்றிருக்கிறான். ஒரு போர்வீரன் தலை தெறிக்க ஓடி வருகிறன்.]

போர்வீரன்:—தளபதி, என்ன அநியாயம்......என்ன பயங்கரம்...நினைத்தாலே நெஞ்சு பகீரென்கிறது...சர்வநாசம்! சர்வநாசம்...!

மார்செல்லஸ்:—முட்டாள், என்ன நடந்தது? ஏன் பதறுகிறாய்?

போர்வீரன்:-களத்தில் நின்று பாருங்கள்...

★

[மார்செல்லஸ் பார்க்கிறன். அவனுடைய முற்றுகையிடும் கப்பல்களில் கட்டப்பட்டிருக்கும் பாய்கள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றன.]

மார்செல்லஸ்:—(வேதனையும் கோபமும் கலந்த குரலில்) கப்பல்கள் எப்படித் தீப் பிடித்தன? நம் வீரர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

போர்வீரன்:—நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை தளபதி! யாரோ ஆர்க்கிமிடிசாம்; பெரிய மந்திரவாதியாம்; மதில்சுவர்களின்மீது ஏறிக் கொண்டு சில கண்ணாடிகளைக் காட்டுகிறன். வெள்ளையான ஒளி பாய்களின்மீது விழுகிறது. சிறிது நேரத்திற்கெல்லாம் பாய்கள் குபீரென்று தீப்பிடித்து எரிகின்றன. குட்டிச் சாத்தான் ஏவலாக இருக்குமோ என்று நம்முடைய வீரர்கள் எண்ணுகிறார்கள்...

மார்செல்லஸ்:—குட்டிச்சாத்தானுமில்லை, பெரிய சாத்தானுமில்லை! பயமென்னும் எழுதுகோல் கொண்டு, அறியாமை என்னும் திரைச்சீலையின் மீது, மூடநம்பிக்கையென்னும் ஓவியன் தீட்டியவைதான் இந்தப் பேய்களும் குட்டிச் சாத்தான்களும்! ஆர்க்கிமிடிஸ் மந்திரவாதியல்ல! அறிவியல் கலைஞன்—சாக்ரடீசுக்குப் பிறகு கிரேக்கம் கண்ட அறிவுக் கருவூலம் அவன்...அறிவை அறியாமையால் வெல்ல முடியாது! தீப்பிடிக்காத துணிகளால் பாய்மரங்கள் தயாராகட்டும்... ஆர்க்கிமிடிசின் ஆற்றலுக்கு அது சவாலாக அமையட்டும்...

★

[ஹீரோ மன்னனும் ஆர்க்கிமிடிசும் தனிமையில் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

ஹீரோ:—ஆர்க்கிமிடிஸ், நீர் பெரிய வித்தகர்! உங்களை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை... கப்பல்களையெல்லாம் எப்படித் தீப்பிடிக்க வைத்தீர்கள்...?

ஆர்க்கி:—விஷயமொன்றும் பெரிதல்ல; இதோ பாருங்கள்—இவை ஒரு வகைக் கண்ணாடிகள். 'லென்ஸ்' என்று இவைகளுக்குப் பெயர். சூரிய கிரணங்களைக் குவிக்கும் ஆற்றல் படைத்தவை. ஒளிக்கிரணங்கள் குவிக்கப்படுவதால் ஏற்படும் வெப்ப பலன் பொருள்களை எரியச் செய்கிறது. உதாரணத்துக்குப் பாருங்கள்! (காய்ந்த இலையொன்றின் மீது சூரியகிரணங்களை பூதக் கண்ணாடியால் குவித்து எரிய வைத்துக் காட்டுகிறார்.)

ஹீரோ:—(ஆச்சரியத்துடன்) அற்புதம்! அற்புதம்! ஆர்க்கிமிடிஸ், வல்லவனுக்குப் புல்

8-ம் பக்கம் பார்க்க

வெள்ளி 17—5—57 சென்னை

நம்பிக்கைத் துரோகம்!

பாராளுமன்ற உறுப்பினர்களால் 'பகற்கொள்ளை' யென்றும்; 'தலை சுற்ற வைக்கிறது' என்றும் சிறப்பித்துச் சொல்லப் பட்டிருக்கிற இந்திய அரசினரின் பட்ஜெட், விசித்திரம் நிரம்பியதாக மட்டுமல்ல; காங்கிரஸ்காரர்களைப் 'புத்திசாலிகள்' என்றும் காட்டிக் கொடுத்திருக்கிறது. ஏனெனில் மூன்று மாதங்களுக்கு முன் இவ்வளவு வரி விதிப்புகள்கொண்ட பட்ஜெட் நாட்டைப் படையெடுத்திருக்குமேயானால், சிவன்லால் சாக்சேனா குறிப்பிட்டதைப் போல நிதியமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் மட்டுமல்ல; காங்கிரஸ் கட்சியே அதிகாரத்திற்கு வரமுடியாத நிலைமை உருவாகியிருக்கும்! அந்த விதத்தில் 'புத்திசாலித்தனமாக' வரும் ஐந்தாண்டுகளுக்குத் தங்கள் இடத்தைச் சாசுவதப்படுத்திக்கொண்டு ஏழை நடுத்தர வர்க்கத்தினருக்குச் சமாதிக் குழி தோண்டியிருக்கிறார்கள்!

இந்திய உபகண்டத்தின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு புதுமை பெற்றிருக்கிறது இந்த 'பட்ஜெட்' திட்டம். இதுவரை ஆண்டுதோறும் பீரங்கியால் சுடுவதைப் போலவே ஒரு சில வரிகளைத்தான் பிரேரேபிப்பார் நிதியமைச்சர். ஆனால் இந்த முறையோ ஜாலியன் வாலாபாக்கிலே டயர் சகோதரர்கள் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைப் போல; பம்பாயிலே மொரார்ஜி தேசாயின் ஆட்சி மக்களது மாமன்றத்தின்மீது மழையென தோட்டாக்களை வாரியிறைத்ததைப்போல நூற்றிப் பன்னிரண்டு இனங்களில் மாற்றங்கள் கோரும் விதத்திலே இந்த ஆண்டு பட்ஜெட் பிறந்திருக்கிறது.

பொதுமக்கள் என்பவர்கள் வரி கொடுக்கும் விதத்திலே தேன் கொடுக்கும் மலருக்குச் சமமானவர்கள். வரி வசூலிக்கும் அரசாங்கம் உண்மையிலேயே ஒரு தேனியைப் போலப் பணியாற்றினால் தான் வெற்றிகரமாகத் தன் பணியைச் செய்து முடிக்க முடியும்.

தேனி தனக்கு வேண்டிய தேனை மலரிலிருந்து உறிஞ்சி எடுத்துக் கொள்ளும்போது; தேன் சேகரித்து வைத்திருக்கிற அழகு மலர்களைக் கசக்குவதில்லை. இதழ்கள் வீணாகாமல்; காம்பு ஒடிந்து விடாமல்; மலருக்கு எந்தவிதத் தொந்தரவும் கொடுக்காமல் தனது காரியத்தைச் செய்து முடித்துக் கொள்கிறது.

அரசாங்கமும் அப்படித்தான் இருக்க வேண்டும்; ஏழை நடுத்தர பொதுமக்களிடமிருந்து வரி வசூலிக்கும்போது அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் — அவர்களது வாழ்க்கைத் தரத்துக்கு ஊறுதேடாமல் தனது பொருளாதார முறைகையைப் போட வேண்டும். நல்ல அரசாங்கம் அப்படித்தான் செய்யும்.

ஆனால் இந்த முறையோ காங்கிரஸ் அரசாங்கம் தேனியாக இருந்து பொதுமக்கள் என்னும் மலரிலிருந்து தேன் எடுக்கவில்லை; காண்பதற்கே பயங்கரத் தோற்றமளிக்கும் கொடிய அட்டையாக மாறி ஏழை நடுத்தர வர்க்கத்தவரின் இரத்தத்தை உறிஞ்சுவதற்கு முற்பட்டிருக்கிறது.

'சோஷலிச பாணி'யை அடைய வேண்டுமென்கிற தீவிர நோக்கத்தை வெளிக் காட்டுகிற விதத்திலே தனி நபருக்கு இரண்டு லட்சமும்; இந்து கூட்டுக் குடும்பத்திற்கு மூன்று லட்சமும் விலக்களித்து அதற்கு மேற்பட்ட சொத்து முழுவதிற்கும் படிப்படியாக வரி விதித்திருக்கின்றனர்.

அதைப் போலவே 60,000க்குக் குறையாத வருமானம் உடையவர்களின் செலவினத்திற்கெல்லாம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.

—தனவந்தர்களையும், பண முதலாளிகளையும்தான் பாதிக்கிறது என்கிற விதத்திலே; இந்த வரிகளை அமுல் நடத்துவதிலே உள்ள குறைகளை மறந்துவிட்டு இவைகளை முற்போக்காளர்கள் வரவேற்கும் நிலையிலிருந்தாலும்; அதே நேரம் ஏழை நடுத்தர வர்க்கத்தினரின் வயிற்றிலடிக்கப்படும் வெங்கொடுமைச் செயல் கண்டு கண்டிக்காமலுமிருக்க முடியவில்லை.

சர்க்கரை; தேயிலை; காப்பி; புகையிலை; தீப்பெட்டி—முதலிய பண்டங்கள்மீது தீர்வை உயர்த்தப் பட்டிருக்கிறது!

தந்திக் கட்டணங்கள் மீண்டும் உச்சாணிக் கிளைக்கு ஏறியிருக்கின்றன.

எந்தத் தபால் கார்டின் விலையைக் குறைத்துவிடுவோம்—என்று கூறி வெள்ளையனை விரட்டியடித்தார்களோ, அதே தபால் கார்டின் விலை இப்போது ஒரு அணாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது!

இதைவிட இன்னும் கொடுமையான செயல் என்னவெனில் ரயில்வே பிரயாணத்திற்கும் இப்போது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. முப்பது மைலுக்குள் பிரயாணம் செய்தால் 5 சதவீதமும்; ஐநூறு மைலுக்குள் பிரயாணம் செய்தால் 15 சதவீதமும்; ஐநூறு மைலுக்கு மேல் பிரயாணம் செய்தால் 10 சதவிதமும் பிரயாணிகள் வரி செலுத்தியாக வேண்டும்!

—இந்த வரி விதிப்பு அனைத்தும் ஏழை நடுத்தர வர்க்கத்தினரை நேரடியாகப் பாதிக்கக் கூடியவை.

இந்த முறை நீதிதானா; நேர்மைதானா; என்று கேட்டால் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற வேண்டுமானால் மக்கள் இந்தத் 'தியாகத்தை' ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டுமென்று அழுத்தந் திருத்தமாகக் கூறுகிறார்கள், ஆட்சியாளர்கள்!

ஒரு காலத்தில் பொதுமக்கள் ஐந்தாண்டுத் திட்டம் போன்ற வார்த்தைகளிலே தங்கள் கருத்தினைப் பறிகொடுத்துத்தான் இருந்தார்கள். ஆனால் இந்தத் திட்டம் அமுலாகும் விதத்திலே தென்னகத்திற்கு ஏமாற்றம் என்பதுமட்டுமல்ல; எவ்வளவு கோடிக் கணக்கான ரூபாய்கள் அரசாங்கக் கஜானாவை விட்டு வெளிக் கிளம்பி; போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேராமல் பாதகர்களின் வயிற்றுக்குள்ளே போய் விழுந்திருக்கிறது? இதுபோல் எத்தனை ஊழல்கள் வெளிக்குத் தெரியாமலேயே மறைக்கப்பட்டிருக்கின்றன?

—இவைகளையெல்லாம் நோக்கும்போது நிலத்தை நல்ல முறையிலே பாத்திகளாகப் பிரித்து கரை அமைக்காமலேயே கிணற்று நீர் முழுவதையும் பாய்ச்சுகின்ற முயற்சியிலேதான் இந்திய அரசினர் இறங்கி இருக்கின்றனர் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

அதுமட்டுமல்ல; ஏழை எளியவர்களிடமிருந்து வரிப்பணத்தைப் பிடுங்கி அதை விழலுக்கு வாரி இறைக்கிறார்கள் என்னும்போது வேதனை குறுக்கிடத்தான் செய்கிறது:

உதாரணமாக இந்த பட்ஜெட்டிலே அம்பர் சர்க்கா மூலம் கதர் அபிவிருத்தி நடத்த சுமார் பத்துகோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்!

கார்டு விலை அதிகம் — ரயில் பிரயாணத்திற்கும் வரி—தீப் பெட்டிக்கும் அதிகத் தீர்வை!

—ஆனால் அதே நேரத்தில் கைத்தறிக்குப் போட்டியாக விளங்கும் வீணான கதர் அபிவிருத்திக்கு பத்து கோடி ரூபாய்களைப் பாழடிக்கிறார்கள்!

—இதுபோன்ற வீண் விரயத்துக்கெல்லாம் ஏழை வர்க்கத்தவராகிய நாம் வரிகொடுப்பதை 5-ஆண்டுத் திட்டத்திற்காக நாம் செய்யும் 'தியாகம்' என்று கருத முடியும்?

அல்ல; தியாகமல்ல அவை! எந்த ஏழை எளியவரிடமிருந்து வாக்குபெற்று அரச பீடம் ஏறினார்களோ, அந்த காங்கிரஸ்காரர்கள் அதே ஏழை எளியவர்களுக்குச் செய்யும் நம்பிக்கைத் துரோகம் தான் இந்தப் புதிய வரி விதிப்புகள்!

—இந்தத் துரோக நாடகம் இதோடு முடிந்து விடாது. சென்னை அரசாங்கம் அடுத்த திங்கள் தனது வரி விதிப்பைத் தெரிவிக்கப் போகிறது. அப்போது என்னென்ன கொடுமைகள் காத்திருக்கின்றனவோ? ஏ, ஏழை நடுத்தர வர்க்க மானிடனே; இன்னும் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ள இப்போதே உன் முதுகைத் தயார் செய்துகொள்!

முரசொலி 17—5—57

கழகம்-கைத்தறியாளரின் துணைவன்!

மு. கருணாநிதி

[குளித்தலையில், 11—5—57 மாலையில் குளித்தலை தாசில்தார் திரு விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடந்த கைத்தறி வார விழாவில் மு. கருணாநிதி பேசியது.]

கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிற இந்த நேரத்தில் கைத்தறி நெசவாளர்கள் களிப்போடும், குதூகலத்தோடும், பெருவகையோடும் இதில் கலந்துகொள்கிறார்கள் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

தமிழர்கள், திராவிடர்கள், மானத்திற்கு மிக மிக மதிப்பளிக்கக்கூடிய சந்ததியினர். அத்தகைய திராவிடப் பெருங்குடி மக்கள், முதலிலே இந்த நாட்டிலே நாகரீகம் உதயமான நேரத்தில், மானத்தோடும், நாகரிகத்தோடும் வாழ்வதற்காகத்தான் தங்களுடைய முதல் முயற்சியை எடுத்துக் கொண்டனர் என்பதை உலகவரலாறு, மனிதன் தோன்றிய காலத்திலிருந்து நாம் படிக்கும் வரலாறு நல்ல முறையிலே தெரிவிக்கின்றது. காடுகளிலும், குகைகளிலும், மரப் பொந்துகளிலும், மலையடிவாரங்களிலும் மனிதன் வாழ்ந்த காலத்தில் — பச்சை மாமிசத்தை உண்டு வாழ்ந்த நேரத்தில்—இனம், முறை, சாதி பாகுபாடு இவைகளெல்லாம் இல்லாத மனித சமுதாயமாக இருந்த நேரத்தில்—மனிதன் தான் உண்ணுவதற்கு உணவு எவ்வளவு அவசியம் என்று கருதினானோ; அதைவிட அதிகமாக மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகின்ற முயற்சியிலே ஈடுபட்டான்.

இன்றைய தினம் மிக மிக எழில் தரக்கூடிய பட்டாடைகளையும், பருத்தி ஆடைகளையும் உடுத்துகின்ற மனிதன், அன்றைய தினம் அந்த அளவுக்கு நாகரிக மேம்பாடு அடையாவிட்டாலும், மரப்பட்டைகளையோ—இலைதழைகளையோ - தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்கிற சாதனமாகக் கருதி, அவைகளை ஆடைகளாக ஆக்கிக்கொண்டிருந்தான். அந்தக் காலத்திலேயிருந்து, பகட்டோடு பட்டாடைகளை உடுத்திக் கொள்கிற இந்தக் காலம் வரையில் மனிதன் தன்னுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உதவிய பெருந்தொழில் இந்த ஆடை நெய்கின்ற தொழில்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அத்தகைய மானத்தைக் காப்பாற்றுகின்ற—ஆடை தருகின்ற—அருமைத் தொழிலாள நண்பர்கள் இன்றைய தினம் எவ்வளவு வேதனைக்கு ஆளாகி இருக்கிறார்கள்; எப்படி விசனக் கண்ணீர் வடித்துக் கொண்டு இருக்கிறார்கள்; என்பதை நாள்தோறும் ஏடுகள் மூலமாகவும், அவர்களுடைய கூக்குரல் மூலமாகவும், நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். குளித்தலையிலே கைத்தறி வாரம் கொண்டாடப்படுவது போலவே, சென்னையிலேயும் கொண்டாடப்படுகிறது. இதைவிட ஆடம்பரமான—எழிலான மண்டபம் ஜோடிக்கப்பட்டு; அதிகமான பேச்சாளர்கள்—ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைவர்கள்; அமைச்சர்கள் வரவழைக்கப்பட்டு; நடன நிகழ்ச்சிகளும், நாடக நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு—கொண்டாடப்படுகின்றது. ஆனாலும் அங்கே கூடி, அந்த விழாவிலே கலந்து கொள்கின்ற கைத்தறி நெசவாளர்கள் உற்சாகத்தோடு இருக்கிறார்களா—என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு அமைச்சர்களை வரவழைத்திருக்கிறோம்; அமைச்சர்கள் கேட்காவிட்டாலும், வந்திருக்கின்ற தலைவர்கள் நம்முடைய குறைகளை எடுத்துச் சொல்ல மாட்டார்களா—என்கின்ற நம்பிக்கையில்தான் அவர்கள் விழாவில் குழுமியிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுடைய குறைகள் துடைக்கப்படவில்லை என்பதையும், அதற்கான குரல் அங்கிங்கெனாதபடி எங்கும் எழும்பிக் கொண்டிருக்கிறது என்பதையும் அரசியல் அறிவு படைத்தோர் மறுக்க முடியாது.

சென்ற தடவை கூடிக் கலைந்திருக்கின்ற சென்னை சட்டமன்றத்தில் கவர்னர் பெருமான் அவர்கள் தன்னுடைய உரையை நிகழ்த்திய நேரத்தில், எதிர்க் கட்சியிலே அமர்ந்திருக்கின்ற நாங்களெல்லாம் அந்த உரையிலே இருக்கின்ற விஷயங்களை எடுத்து ஆய்ந்து, அறிந்து, காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எதிரே—ஆளும் அமைச்சர்களுக்கு எதிரே—விவாதித்துப் பேசிய நேரத்தில், அவரது நீண்ட உரையிலே எந்தெந்த பிரச்சினைகளைப் பற்றியோ பேசப்பட்டிருந்தாலும்—2 000 பொலிக்காளைகளைப் பற்றியும், கோழிப் பண்ணைகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தாலும், கைத்தறி நெசவைப் பற்றி ஏதோ ஒன்றிரண்டு வார்த்தைகளே காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டி உணர்த்தினோம். நாடெங்கிலும் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகின்ற நேரத்திலே கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைப்பதற்காக இருக்கின்ற திட்டங்கள் என்னென்ன என்று கவர்னர் உரையில் எடுத்துச் சொல்லப்படவில்லை—என்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அங்கே நாங்கள் எடுத்துரைத்தோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மிக மிக நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நான் இங்கே பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் கைத்தறி நெசவாளர்களோடு இரண்டறக் கலந்து ஒன்றிப் பழகியிருக்கிறோம். அவர்களுடைய வேதனைகளை பகிர்ந்து கொண்டிருக்கிறோம். அவர்களுக்காக வெறும் கூச்சல் போடுகிறவர்களாக இல்லாமல் அவர்களுக்கென சில பல ஆக்க வேலைகளிலும் ஈடுபட்டிருக்கிறோம் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன், கைத்தறிக்கு 'மார்க்கட்'டே இல்லாமல் போய்—'கைத்தறித் துணிகளை மதிப்பாரில்லை' என்கிற அளவுக்கு நாட்டிலே நிலைமை வளர்ந்து—சேலம், கோவை, துறையூர், உறையூர் போன்ற இடங்களிலே கைத்தறி நெசவாளர்கள் குடும்பம் குடும்பமாக பட்டினிச் சுமையைத் தாங்க முடியாமல் சென்னை போன்ற இடங்களுக்குப் படையெடுத்து வருகிறார்கள்; மந்திரி மார்களுடைய வீட்டு வாசலிலே முகாமிடுகிறார்கள்; தங்களுடைய அவலக் குரலை அமைச்சர்களுடைய காது வலிக்க வலிக்க, தங்கள் அடிவயிறு வலிக்க வலிக்க எடுத்துச்சொல்லுகிறார்கள்; என்கிற வேதனையான செய்திகளை நாம் கேட்டோம். அந்த நேரத்திலே, தேங்கிக்கிடக்கிற கைத்தறித் துணிகளுக்கு நல்லதொரு 'மார்க்கெட்'டை உண்டாக்கித் தரவேண்டும்; நல்லதொரு மதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்கிற காரணத்திற்காக, கழகத்திலுள்ள அத்தனை பேரும், முன்னணி வீரர்களும், தலைவர்களும், கிளைக் கழகத்தின் செயலாளர்களும், மாவட்டச் செயலாளர்களும், கைத்தறித் துணிகளை தோளிலே சுமந்து, ஒவ்வொரு ஊரிலும் தெருத் தெருவாக சென்று விற்றிருக்கிறோம் நான் சென்னையிலே மட்டும் 10 000 ரூபாய்க்கு கைத்தறித் துணிகளை தெருத் தெருவாகச் சென்று விற்பனை செய்தேன். அதைப் போலவே அண்ணா அவர்கள் திருச்சியிலும், பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் காரைக்குடியிலும், தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் கோவையிலும் துணிகளை விற்று, ஒரே நாளில் 1,50,000 ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணியை நாட்டிலே விற்றுக் காட்டி, அதற்கு இருக்கிற மதிப்பை — கைத்தறித் துணியிடத்தே மக்கள் காட்ட வேண்டிய அக்கரையை நாட்டுக்கு வலியுறுத்திச் சொன்னோம். அன்றுமுதல் கைத்தறித் துணியைத்தான் கூடுமானவரையிலே கழகத்திலே உள்ளவர்கள் உடுத்துவது என்கிற வேண்டுகோளையும் விடுத்தோம்.

இன்றைய தினம் கைத்தறி நெசவாளர்களுக்காக செய்யப்பட்ட திட்டங்களும், தீர்மானங்களும் கேட்பாரற்றுக்கிடக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். ராஜகோபாலாச்சாரியர் அவர்கள் மந்திரியாய் இருந்த நேரத்தில், கைத்தறி நெசவாளருக்காக நல்லதொரு திட்டமொன்று தீட்டப்பட்டு, வட நாட்டு சர்க்காரிடத்திலே வைக்கப்பட்டது. கரை போட்ட வேட்டியும், சேலையும் கைத்தறி நெசவுக்கே தரப்படவேண்டும்; மில்களுக்குத் தரக் கூடாது; வழங்கப்படக்கூடாது—என்கிற யோசனை வடநாட்டுக்குக் கூறப்பட்டது. ஆனால் மத்திய சர்க்கார் அதை காதில் போட்டுக்கொள்ளாத காரணத்தால், இன்றைய தினம் ஆலைத் துணிகள் கைத்தறித் துணிகளுடன் போட்டி போட்டு, அதன் வளர்ச்சியை சீரழித்து விட்டதால் கைத்தறி நெசவாளிகள் மிக மிக கஷ்டத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல; கரை போட்ட வேட்டி, சேலை நெய்யும் உரிமையைக் கைத்தறிக்கு வழங்காதது மட்டுமல்ல; தறிக்கே உள்ள தனி உரிமையான லுங்கி நெய்யும் உரிமையை இன்றைய தினம் ஆலைத்தொழிலுக்கு—மில் தொழிலுக்குத் தந்து விட்டார்கள்.

ஒரு காலத்திலே தமிழகத்துக் கைத்தறித் துணிக்கு உலகத்திலே இருந்த மதிப்பும், உலக வாணிபத்தில் இருந்த பெருமையும், இன்றைக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருக்க

* 9-ம் பக்கம் பார்க்க

"அன்பரே! முன்னமே எழுதலாமென்றிருந்தேன். ஆனால் தாங்கள் சுற்றுப் பயணம் சென்றிருந்ததால் இப்பொழுதுதான் எனக்கு எழுத முடிந்தது. ஆனால்...என்னவென்று எழுதுவது எப்படித் தெரிவிப்பது என்று என் கைகளெல்லாம் நடுநடுங்குகின்றன. எனக்கே புரியாதிருக்கும்போது எப்படி அத்தான், அதை விவரமாக உங்களுக்குக் கூற முடியும்?

ஆறேழு மாதங்களுக்குமுன் நீங்கள் இங்கு வந்திருந்தபோது நிலவு காயும் நேரங்களிலும், நீரோடை ஓரங்களிலும் நெஞ்சு கலந்து உறவாடிக் கொண்டிருந்தபோது 'கண்டோம்; கண்டோம்; காத்திரு! கலங்காதே! உன்னை கரம் பிடிக்கக் காலம் தூரத்திலில்லை' என்றெல்லாம் எனக்கு தைரியம் அளித்தீர்கள். அப்பொழுதெல்லாம் அத்தான், நினைத்துக்கூடப் பார்க்க வில்லையே, இவ்வளவு பெரும் பழிக்கு நான் ஆளாவேன் என்று!

என்மீது நீங்காத நம்பிக்கை வைத்துவிட்ட உங்களுக்கு நான் தரப்போகும் சேதி அதிர்ச்சியாக இருக்கும். ஆனாலும் அது வேதனையான உண்மை...கசப்பான சேதி... ஆம், அத்தான்......நான் இப்பொழுது ஒரு கற்பவதி!

'கற்பரசி என்று களித்திருந்தேனே, கள்ளீ! என்னிடமே கபட நாடகமாடி விட்டாயே' என்று தாங்கள் கதறுவது நன்றாகக் கேட்கிறது எனக்கு. ஆனால் தயவு செய்து இச்சோக முடங்கலை முழுவதும் படித்து விட்டு ஒரு முடிவுக்கு வாருங்கள்.

அத்தான்! என்னைப் பெற்ற தாயின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உள்ளத்தால் நான் களங்கம் நினைக்கவுமில்லை. உடலாலும் நான் மாசுபடவில்லை. ஆனாலும் அத்தான், எப்படியோ ஒரு குழந்தையை சுமந்து கொண்டிருக்கிறேன். உண்மை என்னவென்று எனக்கேதெரியவில்லை. புராண காலத்துப் புரட்டுக் கதைகளைப் புட்டுப் புட்டுக் காட்டிப்பேசும் நீங்கள் இதைக் கேட்டுச் சிரிப்பீர்கள்.

ஆனால் தயவு செய்து என்னை நம்புங்கள். நீங்கள் சகலமும் கற்றவர். என்னை நேரில் காண வாருங்கள். அப்பொழுதுதான் அறியாமையில் இருக்கும் எனக்கு ஏதாவது விளக்கம் தரமுடியும்.

என்னால் வெளியே தலை காட்ட முடியவில்லை. தாய் 'ஊர் சிரிக்கிறதே; இதற்காக வாடி உன்னைப் பெற்றேன்? தேள், தேன்கதலி இவற்றைப் போல பெற்ற தாயையே கொன்று தின்னும் அளவுக்கு வளர்ந்து விட்டாயே' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, அழுத கண்ணும், அகப்புண்ணும் கொண்டு மூலையிலே முடங்கிக்கிடக்கிறார்கள். தந்தையோ 'இந்தத் தறுதலை ஒழிந்த பிறகுதான் ஒரு மடக்கு தண்ணீர் குடிப்பேன்' என்று துண்டை தட்டிப் போட்டுவிட்டுக் கிளம்பியவர், கிளம்பியவர்தான்; வீட்டுப் பக்கம் காணேம். என்ன ஆனாரோ; எனக்குப் பயமாக இருக்கிறது.

செய்யாத ஒரு குற்றத்துக்காக நான் இதையெல்லாம் அனுபவிக்க வேண்டுமா? நாளொரு புழுங்கலும், பொழுதொரு நலிவுமாக செத்துக் கொண்டிருக்கிறேன். ஆறோ, குளமோ, ஆலமரக் கிளையோ பார்க்கலாமென்றால் அதற்குத் தடையாக இருப்பது குழந்தையல்ல—உங்கள் கருணைவடியும் முகந்தான். நாளைக்கு 'நானொருவன் இருக்க, நாதியற்றவளாகப் போய்விட்டாயே' என்று நீங்கள் மனம் வெடித்துப் பேசக்கூடாதே என்றுதான் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்

அக்காதல் இரவானதும் இப்படித்தான் உதிர்ந்து விடுமா?

என் வாழ்க்கையிலேயே ஒரே ஒரு பெண்ணைத்தானே விரும்பினேன். அவளே எனக்கு விஷமாகி விட்டாளே! கள்ளமில்லாப் பார்வை என்றேன்; அதில் இத்துணை அளவுக்கு துரோகம் அள்ளித் தெளிக்கப் பட்டிருப்பதை கண்டுகொள்ளவில்லையே நான்! அழுக்கில்லா உள்ளம் என்று நினைத்தேன்; அதுவும் ஓர் வழுக்கு நிலத்திற்குப் பலியாகிவிட்டதே!

எத்தனையோ கட்டுண்ட காதல் உள்ளங்கள், உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்த முடியாமல், சபலத்திற்கு இரையாகி, பிறகு அதன் விளைவுகளைச் சந்திக்க சக்தியற்றவர்களாகி சாவூரிலே சாந்தி காண்கின்றார்கள். அவர்களைப் போல் அல்லாது நம் காதல்கள் அல்ல; காவியம் என்ற பேராசிரியர் கருத்தை நினைவில் கொண்டு 'உன் உள்ளம்தான் எனக்கு

விசித்திரக்கரு!

இப்பொழுது சொந்தம்; உடல் திருமணத்திற்குப் பின்தான்' என்று சொல்லிவிட்டு வந்தேனே!

என் மனக் குறையைச் சொல்லி அழவேண்டியவர் ஒருவர்தான் பாக்கி. அதுவும் முடிந்துவிட்டது. நீங்களும் நிராகரித்து விட்டால்...

மரண வாயிற்படியில்
மரகதம்"

★

ஐயோ! தேள், தீண்டியிருந்தால் கூட இவ்வளவு துடிக்கமாட்டேனே. விஷத்தைவிடக் கொடுமையான இவ்வார்த்தைக் கோர்வைகளைக் காணத்தானா சென்னை திரும்பினேன்? குழந்தையொன்றுக்குத் தாயாகப் போகிறேன் என்று எழுதுவதைவிட என் குரல் வளையை நெறித்திருக்கலாமே!

எந்தப் பெண்ணுடனாவது சரளமாகப் பழகினால் பிறகு அது நம்மை சஞ்சலத்தில் மாட்டிவிடுமே—அத்தகைய பருவமாயிற்றே—என்று கல்லூரியில் படிக்கும் பொழுதெல்லாம் அப் பாவைகளிடமிருந்து பத்தடி தள்ளி நின்றே பழகியவன், மதுராங்கத்தில் மரகதத்தைக் கண்டவுடன் என்னையறியாமலே காதல் வயப்பட்டேனே! அதற்குப் பரிசா இது? 'காலையிலே அரும்பி, பகலெல்லாம் போதாகி, மாலையிலே மலரும் இந்நோய்' என்றாரே வள்ளுவர். அக்காதல் இரவானதும் இப்படித்தான் உதிர்ந்து விடுமா?

புண்ணும் சொல்லி, புண்ணுக்கு மருந்தும் சொல்லி, பூசி மெழுகுகிறாள் புரையோடிப் போனவள்! சீதைக்கு அக்காள் இவள்! உடலாலும் உள்ளத்தாலும் கறைப்படவில்லையாம்; ஆனால் கூடலின் கனிப் பொருளை மாத்திரம் தாங்கிக் கொண்டிருக்கிறாளாம்; எப்படி என்று அவளுக்கே தெரியவில்லையாம்! புராணீகர்களின் குப்பைக் கூளங்களில்கூட 'ரிஷிப்பிண்டம் ராத் தங்காது' என்றுதான் இருக்கிறதே தவிர, உடலுறவில்லாமல் உயிரொன்று ஈன்றாள் என்றில்லையே!

அப்பப்பா...ஆண்களைத்தான் மந்தியென்றும், வண்டு என்றும் உவமை காட்டிப் பேசுகிறார்கள் கவிஞர்களும், கதாசிரியர்களும். மரகதம் போன்ற பெண்களை...?

ஒரு வேளை...ஆம்...அப்படித்தான் இருக்க வேண்டும்...என்னுடன் கழித்த உல்லாசப் பொழுதும், சல்லாப உரையாடல்களும், நான் பிரிந்த பிறகு, அவள் உள்ளத்தில் மோகவெறியைத் தூண்டியிருக்கும். அச்சமயம் வேறொருவன் விரித்த வலையிலே விழுந்திருக்கும் அப்புறா. விரகதாபத்தால் வெந்துகொண்டிருக்கும் அவள் நிலைமையை சாதகப் படுத்தி, அவளது விசித்திர வேதனையைப் போக்கியிருப்பான் அச் சந்தர்ப்பவாதி! கலவியின் பயன் கைமேல் என்றவுடன் எல்லோரையும் போல் கள்ளக் 'காதலனும்' அந்தர்த்தியானமாகியிருப்பான். பேதைக்கு வழி ஏதும் புலப்படாததால் பைத்யக்காரன், வெகுளி என்று நினைத்துக் கொண்டு என்னிடம் புகலிடம் தேடுகிறாள். அத் தையலின் மையலிலே மயங்கி கிடப்பேனுக்கும்; மடக்கி விடலாம் என்ற எண்ணத்தின் விளைவுதான் இந்த நடவடிக்கை... அப்படித்தான் இருக்கவேண்டும்...பின் எப்படி தகப்பன் இல்லாமல் கரு உண்டானதாம்?...தெய்வ சித்தமோ?

நல்ல வேளை; அப்பாவச் சின்னத்திற்கு நான்தான் 'அப்பா' என்று இங்கு வந்து முகாரி பாடாமல் இருந்தார்களே; அது வரைக்கும் நல்லதுதான்—இப்படித்தான் கடிதத்தைக் கண்டு குமுறிக் குமுறி அழுத தியாகராஜ் தன்னை ஒருவாறு தேற்றிக் கொண்டான்.

★

நாட்கள் நகர்ந்தன...அந்த மாதத்திய 'வேர்ல்டு சையன்ஸ் டைஜஸ்ட்'ப் புரட்டிக்கொண்டிருந்தான் ஒருநாள்...அதிலே வைத்தியச் செய்திப் பொறி ஒன்று அவன் கண்ணில்பட்டது.

"விசித்திரக் கரு" என்ற தலைப்பிட்டிருந்த அச்செய்தியைப் படித்து முடித்தவுடன் அவன் கண்கள் இருண்டன. அதிகம் குடித்துவிட்டு கண்களை மூடினால் எப்படிஉலகமே ஒருவனது முகத்தில் வந்து அறைவதுபோல் தோன்றுமோ அப்படிப்பட்ட உணர்ச்சிதான் அவனுக்கும் ஏற்பட்டது. அவன் இதயத்தை யாரோ இயந்திரத்தில் வைத்து நசுக்குவதுபோலிருந்தது. கண்களை கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் மீண்டும் படித்தான். கனவல்ல...நினைவுதான்...விஞ்ஞான உண்மை...விசித்திரமான உண்மை...ஆனால் அது அவனை அங்கம் அங்கமாக அறுத்தெறிந்தது! சதைவேறு எலும்பு வேறாகப் பிய்த்தெறிந்தது!

"ஐயோ! அப்படியானால்... மரகதம் விஷயமும் அப்படித்தானா? அவளும் மாசற்றவள் தானா? தாயின்மீது ஆணையிட்டாளே அத் தூய்மையின் திருவுருவம்! தாய்ப்பாசம் அறியாத தடித்தத் தோளன் நான், அவ்வாணையின் மகத்துவத்தைப் புரிந்து கொள்ள வில்லையே! உலகத்தை ஓரளவு உணர்ந்தவன் என்ற தைரியத்தில்தானே, அந்த விசித்திர

✹ 8-ம் பக்கம் பார்க்க

அ. ராஜா, எம். ஏ., எம். எஸ்ஸி.

சாமிமார்க்கெல்லாம் தைரியம் வளருது; தொப்பை சுருங்குது!

✻ முதல் பக்கத் தொடர்ச்சி

வசைமாரி பொழியப் படுகிற நேரமிது! முன்னுக்குப் பின் முரணைச் செய்கிற காரியங்கள் அத்தனைக்கும் புது விளக்கங்கள் கொடுத்துக் கொண்டு, தனது கடைசி காலத்தைக் கழித்து வருகிற கட்சியொன்று—நாம் நின்றாலும் உட்கார்ந்தாலும்—நிமிர்ந்தாலும் குனிந்தாலும் ஒவ்வொரு அங்க அசைவுக்கும் அர்த்தம் கூறிக் கொண்டு 'விதண்டா வாதம்'' பேசி வருகிற சமயமிது! பார்ப்பனர்களை நாட்டை விட்டு வெளியேற்றியே தீருவோம் என முழங்கிய அதே வாய் அவர்களைச் சட்ட மன்றத்திலும் பாராளு மன்றத்திலும் உட்காரவைத்தே தீருவோம் என்று தேர்தல் நேரத்தில் வாய்க்கரிசி போட்டுக் கொண்டதை அரசியல் கோமாளிக் கூத்து என்றுதான் அறிவுடையோர் வர்ணிப்பர்!

நம்மீது என்னதான் அவதூறுக் கணைகள் பூட்டப்பட்டாலும் நாம் நமது இலட்சியப் பாதையிலே கொள்கையினின்றும் சிறிதும் பிறழாமல் நடைபோடுகிறோம் என்ற பெருமையோடு உலவுகிறோம். பார்ப்பனர்களைப்பற்றி தி. மு. கழகம் என்ன கருதுகிறது—அவர்கள் கழகத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்து யாது—அவர்களுக்கும் கழகத்திற்கும் தொடர்பு ஏற்படுவது உண்மைதானா?

என்பன போன்ற ஐயப்பாடுகள் தோன்றுவதற்கும் அதில் மிகுந்த ஆவலைத் தமிழகம் காட்டுவதற்கும் யார் காரணமாயிருந்தாலும் விளக்கமுரைக்க வேண்டிய நிலை இன்றியமையாதது! அதற்கு உன் கடிதம் பயன்படுவது மகிழ்ச்சிக்குரியதே!

பார்ப்பனர்களுக்கும் திராவிட இயக்கத்திற்கும்; இன்று நேற்றல்ல — குறிப்பிட்ட சிலரின் தொடர்பு பல காலமாகவே இருந்து வருகிறது முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பெரியாருடன் துணை நின்று இந்தியை எதிர்த்துக் காரசாரமாகத் தாக்கிப் பேசியவர்களில் ராசகோபாலாச்சாரியாரும் ஒருவர்! என்ன: ஆச்சரியப் படுகிறாயா? ஆமாம் பொன்முடி; ஆயிரத்துக்கு மேற்பட்டோரை சிறையில் தள்ளி பெரியாரைப் பெல்லாரியிலும், அண்ணாவை ஆறு மாதமும சிறையில் வைக்கக் காரணமாயுமிருந்த முதல் இந்தி எதிர்ப்புப் போரில் ராசகோபாலாச்சாரியார் தமிழின் தொன்மையை எடுத்துக் காட்டி, தேவார திருவாசகச் சிறப்பைச் சொல்லி, இந்தியை எதிர்த்து முழக்கமிட்டார். அந்த ராசகோபாலாச்சாரியார் சக்கரவர்த்தியல்ல; சக்கரவர்த்தி மந்திரியாயிருந்த நேரமது! அவரை எதிர்த்தவர் பரவஸ்து ராசகோபாலாச்சாரியார்! இந்தி எதிர்ப்பு முகாமில் முக்கியஸ்தர்! நாமெல்லாம் திராவிடர் கழகமாயிருந்த நேரத்தில் நமது மாணவர் பயிற்சிப் பள்ளி மாலூர் சர்மாவின் கோட்டைக்குள்ளேதான் பெரியாரின் தலைமையில் நடைபெற்றது. சீர்காழி யென்னும் ஊரில் திராவிடர் கழகத்தின் செயலாளராக ஒரு பார்ப்பன நண்பர் பணியாற்றி என்னை அழைத்து ஒரு கூட்டமும் நடத்தியிருக்கிறார்.

ஆரிய மாயை அகல வேண்டும் என்பதிலேதான் நாம் என்றென்றும் நமது கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறோமே தவிர—புதிய திருப்பத்தை ஏற்றுக் கொண்டு மறுமலர்ச்சியை வரவேற்கும் எவரையும் தென்னகத்தில் உள்ளவராயினும் அவர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கி விரட்டிட வேண்டுமென்ற குறு நோக்கு கொண்டிருக்கவில்லை.

'பார்ப்பனீயமே நமக்குப் பகை—பார்ப்பனர் அல்ல!''—இந்த விளக்கம் ஈரோட்டில் அண்ணா தலைமையில் நடந்த திராவிடர் கழக தனி மாநாட்டில் நல்ல பல ஆதாரங்களோடு தரப்பட்டிருக்கிறது!

வயிற்றுக்குணவில்லாத அந்த மாநாட்டில் செவிக்கும் சிந்தைக்கும் உணவாகத் தரப்பட்ட அரிய பெரிய கருத்துக்களில் மேற்கூறியதும் ஒன்று!



''பார்ப்பன மாந்தர்காள்! பகர்வது கேண்மின்! பகுத்தறிவுப் படையில் சேருவீர்!'' என திராவிடர் கழகத்தின் சார்பில் பலமுறை அழைப்பு விடப்பட்டிருக்கிறது: அப்படி அழைப்பு விடுத்த நேரத்தில் எல்லாம் "நீங்கள் படித்தவர்கள்! வரலாறு உணர்ந்தவர்கள்! பழமைக்கும் புதுமைக்குமுள்ள வேறுபாட்டைப் புரிந்தவர்கள்—ஆகவே, நீங்கள்தான் கற்ற அறிவைத் தக்க வழியில் செலுத்தி, மூடச் சேற்றில் கிடக்கும் சமுதாயத்தை சீர்திருத்தப் பணியாற்ற வேண்டும்—நாங்கள் சொல்வதைவிட நீங்கள் சொல்லும்போது பலன் அதிகமிருக்கும். காரணம்; பழைய ஏற்பாடுகளுக்கு வித்தூன்றியது உங்கள் சமுதாயம்! நீங்களே அந்தப் பழமையைச் சாடும்போது; விளைவு திருப்திகரமாயிருக்குமல்லவா?'' என்று தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

அதையே இப்போது. தி. மு. கழகக் கூட்டமொன்றில் அண்ணா அவர்கள் அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருண்மைகளை எனது மதிப்பிற்குரிய பார்ப்பன இளைஞர்களும், அறிவாளிகளும் படித்த வாலிபர்களும் கொஞ்சம் பனதாரச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் அவர்களுக்கு நான் பன்னிப் பன்னி பல ஆண்டு காலமாகச் சொல்லி வருகிறேன்; இன்னும் அவர்கள் என்னுடைய பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டுதான் போகிறார்கள்.

மடாதிபதிகளைக் கண்டிக்கிறோம்—அவர்கள் பார்ப்பனரல்லாதார் என்று தெரிந்தும் கண்டிக்கிறோம். ஜமீன்தார்களைக் கண்டித்தோம்-ஜஸ்டிஸ் கட்சியைக் கண்டித்தோம் — அதிலுள்ளோர் பார்ப்பன ரல்லாதார் என்று தெரிந்தும் கண்டித்தோம்.

பாப்பனீயத்தைக் கண்டித்தால் அது பார்ப்பனரைக் கண்டிப்பதாகும் என்று கருதி இன்னமும் நீங்கள் தி. மு. கழகத்தை விட்டு ஒதுங்கி நிற்கிறீர்கள். அப்படி ஒதுங்கி நின்றால் அறிவாளிகள் சமூகம் என்று உங்களுக்கு இருக்கிற பெயர் பொய்த்துப் போகும்.

நீங்கள் கடைசிவரையில் பார்ப்பனராகவே இருக்க முடியும் என்று கருத வேண்டாம்; அது நடக்கவும் நடக்காது!

எப்படி ஜப்பான் நாட்டில் சமுரா என்ற வகுப்பார், தாங்களே ஒன்றாகக் கூடி, இனி நாம் தனி வகுப்பு என்றிருக்கிற வரையில், உலகத்தில் ஜப்பானுக்கு மதிப்பு இருக்காது எனத் தீர்மானித்து ஒரே நாளில் சமுரா வகுப்பார் தங்களுக்கிருந்த பிறப்புரிமைகளை யெல்லாம் விட்டுக் கொடுத்து ஜப்பான் நாட்டு சமுதாயத்தில் இரண்டறக் கலந்து விட்டார்களோ; அது போல் பிராமண வாலிபர் மாநாடு, பிராமண முற்போக்கு வாலிபர் மாநாடு என்று இப்படிப் பல பெயர்களில் சேர்ந்தாலும் சரி பார்ப்பனீயத்திலுள்ள கேடுபாடுகளை நீக்க படித்த பார்ப்பனர்களாகிய நாங்கள் முன் வந்திருக்கிறோம் என்று கிளம்பினால் ஒழிய உண்மையிலேயே இந்த நாட்டில் வகுப்புகளுக்குள் இருக்கும் மனமாச்சரியம் போகாது-சமுதாயமும் வளராது!

இந்த சமுதாயம் வளராமல் இருக்கிற வரையில்-தென்னாட்டைப் பொறுத்தவரை பார்ப்பனர்-பார்ப்பனரல்லாதார் பேதம் இருக்கிற வரையில்-தெளிவாகத் திட்டமாக எழுதிக் கொள்ளுங்கள்; வடநாட்டான் காட்டுகிற வழியில்தான் தென்னாடு நடக்கும்!''

[அண்ணா பேச்சு;
''நம் நாடு'' 13—4—57]''

இந்தப் பொன்னுரைகளைத்தான் ''வேதபுரத்தாருக்கு நல்ல குறி சொல்லு!'' என்ற குடுகுடுப்பாண்டியின் பாடல் எதிரொலிக்கிறது என்பதை நீ இப்போதாவது புரிந்து கொண்டிருப்பாய் அல்லவா?... ஆரியம், திராவிடத்தில் காலூன்றிய பிறகு விளைந்த வேதனைகளை—நாமல்ல; அவர்கள் வாயிலாகவே கேட்டிருக்கிறோம்.

''ஆதிகாலத்திலே திராவிடர்கள் சாதிபேதமின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். பின்பு ஆரியர் திராவிட நாட்டில் வந்து குடியேறிய திராவிட மன்னர்களின் தயவைப் பெற்றார்கள். சிலர் மன்னர்களுக்கே குருவானார்கள். அதன்பின் தமிழகத்தில் ஆரிய நாகரீகம் பரவத் தொடங்கியது. ஆரிய மதமும், தெய்வங்களும், ஆசாரங்களும் சாதி வித்யாசங்களும் தமிழ் நாட்டில் வேரூன்றி விட்டன.''

மேற்கண்ட கருத்தை வெளியிட்டது யார் தெரியுமா? விஜயநகரம் ராஜா கல்லூரியின் சரித்திரப் பண்டிதரான திரு. எம். எஸ். இராமசாமி அய்யங்கார் அவர்கள் எழுதிய நூலொன்றில் காணக் கிடக்கும் கருத்தாகும் இது!

முதுகுடுமிப் பெருவழுதி யெனும் மன்னவனை, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாக மாற்றியது ஆரியம்தான்

நேத்திரம் திறக்குது - நியாயம் தெரியுது!

போர் வாளினாலும், புஜபல பராக்ரமத்தாலும் புலியெனப் புகழப்பட்ட வீர சிவாஜியின் விழியிலே நீர் பெருகச் செய்து; சூத்திரன் நாடாள்வதா எனக் கேட்டு—மராட்டிய மண்டிலத்தின் மனக் கொதிப்பைத் தூசென எண்ணி, அந்த வீரனை மண்டியிடச் செய்த வல்லமை ஆரியத்துக்கு இருந்தது!

தீண்டத் தகாதவன் தில்லையம்பலம் வருவதா எனக் காய்ந்து, நந்தனைத் தீயிலே குளிப்பாட்டி வதைத்த வஞ்சகம் ஆரியத்தின் நெஞ்சிலே நிறைந்திருந்தது.

ஒரு இனத்துக்கே உரியதாக இருந்த அந்த ஆணவம்—"ஆரியம்" எனும் கொள்கையாக உருப் பெற்று நாளடைவில் பல்வகையினரிடமும் நிலவிடத் தொடங்கியது!

தேனீக்களால் தயாரிக்கப்படுவதால் தேன் எனப் பெயர் வரவில்லை! தேன் தயாரிக்கும் ஈதான் தேனீ எனப் பெயர் பெற்றது! ஆரியமோ அப்படி அல்ல; ஆரியர் வீசுத்த கோட்பாடுகள் 'ஆரியம்' எனவே ஆயிற்று!

அந்த ஆரியம் இன்று பார்ப்பனர்களிடம் மட்டுமே இருக்கிறது என்று யாரும் கூற முடியாது! மடாதிபதிகளின் உருவிலே காணப்படுகிறது-தமிழரெனப்படும் கவிஞர், கலை வல்லோர், மேதைகள், புலவர்கள் அனைவரிடமும் 'ஆரியம்' தலை விரித்தாடுகிறது!

நாம் எங்கெங்கு தீயக்கோட்பாடுகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் நமது எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம். அவை அழிந்துபடப் பணியாற்றுகிறோம்.

அப்படிப் பணியாற்றும் போது பார்ப்பனர்களையும் அழைக்கிறோம்; காரணம்—அவர்கள்தான் அந்தக் கொள்கைகளை விதைத்தவர்கள் என்பதால்! அப்படி அன்பழைப்பு 'அக்கிரகாரம்' நோக்கி விடப்படும்போதுதான் பாரதியாரின் பாடல் நினைவுக்கு வருகிறது!

"படிச்சவன் சூதும்
பாவமும் பண்ணினால்
போவான், போவான்,
ஐயோ வென்று போவான்"

பாரதியார் கொஞ்சம் கடுமையாக சாபம் கொடுக்கிறார்! நாமோ, படித்த இளைஞர்களை—பார்ப்பன மேதைகளை—கனிவோடு அழைக்கிறோம்; "ஐப்பானைப் பாரீர்! சமூரா வகுப்பினரின் மனமாற்றம் பாரீர்!" என்று!

பாரதியார்—வ. ரா. — ஆகியோர் பார்ப்பன குலத்தினர் எனினும் எவ்வளவு புண்பட்ட நெஞ்சத்தோடு ஆரியர்க்கு அறிவுரைகள் கூறியிருக்கிறார்கள் என்பதை அவர்கள் கடைசிக் காலத்தில் எழுதிய எழுத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன என்பதை யார் மறுக்க இயலும் பொன்முடி!

பாரதியார் காலத்திலே படித்தோர் பெரும்பாலோர் பார்ப்பனரேதான்! பட்டம் பெற்றோர் — பதவியில் இருந்தோர்—சட்டம் பயின்றோர்—அனைவருமே அவர்கள்தான்! அவர்கள் சூதுவாதில் வல்லோராய் இருப்பதை வன்மையாகக் கண்டிக்கவே "வேதபுரத்தாருக்கு நல்லகுறி சொல்ல" ஒரு குடுகுடுப்பையை அனுப்பி, கடுமையான எச்சரிக்கையையும் அவன் மூலம் வழங்குகிறார்!

பாரதியார் பாடியும்—நாம் வலிந்து வலிந்து அழைத்தும்—புதுயுகம் காண்பதற்கு ஓடி வருவோர் தொகை அந்த வட்டாரத்தில் மிகக் குறைவாகத்தானே யிருக்கிறது!

நாகையிலே ஒரு வெங்கட்டராமன் கழகத்தின் செயலாளராகப் பணிபுரிகிறார். கோவையிலே ஒரு ராமன்—திருச்சியிலே ஒரு ராமன் — சென்னையிலே ஒரு ராமன் — இப்படி விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்குத்தான் படித்த பார்ப்பன இளைஞர்கள் நமது பாசறை புகுந்து பாட்டாளியின் கூட்டாளிகளாக—தொழிலாளி வர்க்கத்தின் தோள் சேர்ந்து தொண்டு புரியும் தோழர்களாக-தேய்ந்த திராவிடத்தை மீட்டிடும் விடுதலைப் படை வரிசையினராகத் திகழ்வதைக் காண முடிகிறது! இதனால் முழுத் திருப்தி ஏற்பட்டுவிடாவிட்டாலும் தித்திக்கும் செய்தியாகவாவது இருப்பதை மறுப்பதற்கில்லை அந்த இளைஞர்களின் துணிவை படித்தறிந்த மேதைகளின் தைரியத்தை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். பாராட்டுகிற நேரத்தில் இவர்களைக் காட்டி மற்ற பார்ப்பன நண்பர்களுக்கு விளக்க முரைக்க எண்ணி—நாமே பாடினால் தவறாகக் கருதுவரோ என அஞ்சி, பாரதியாரை விட்டுப் பாடச் சொல்லுகிறோம்.

"சாமிமார்க்கெல்லாம் தைரியம்
வளருது!
தோப்பை சுருங்குது
சுறுசுறுப்பு விளையுது!'
"நேத்திரம் திறக்குது—
நியாயம் தெரியுது!
பழைய பைத்தியம் படீலென்று
தெளியுது!"

புரிகிறதா பொன்முடி! புதையலில் ஏன் 'குடு குடுப்பை பாட்டு' என்று!

'ஆனந்தவிகடன்' விமர்சனத்தில் ஒன்று கண்டேன்; புதையலில்—"தாழ்த்தப்பட்ட தமிழகம்" "வடக்கு தெற்கு பிரச்சினை" "காளி கோயில்-பூசாரி-கற்பு" இதெல்லாம் இல்லையென்று விகடன் திருப்தி தெரிவிக்கிறது!

தாழ்ந்த தமிழகத்தின் நிலையை இலங்கைத் தேயிலைத் தோட்டத்தின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறோமெனினும்; தாழ்ந்த தமிழகத்தைப்பற்றிச் சோகக் குரல் எழுப்புவதை விகடன் விரும்பவில்லை யென்பது விசனிக்கத்தக்க வொன்றுதானே! வடக்கு தெற்கு பிரச்சினையால் விகடன் ஆசிரியர் எவ்வளவு அவதிக்குள்ளானார் என்பதை நாமறிவோம்-அவர் உணர்வார்—ஆயினும் நம்மோடு சேர்ந்து வடக்கு தெற்கு குரல் எழுப்ப மறுக்கிறார். நாம் எழுப்புகிற குரலுக்கும் வலுவளிக்கத் தயங்குகிறார். திரைப்படத் தணிக்கையே வடக்கின் பிடிப்பிலேதான் இருக்கிறது என்பதை அவருக்கு நாம் எடுத்துக் காட்டவேண்டுமா, என்ன?

காளிகோயில்—பூசாரி-குருக்கள்-மடாதிபதி - இவைகள் எல்லாம் சமூகத்தின் ஒரு பகுதியை எப்படி நாசமாக்குகின்றன என்பதை உணராதவரல்ல விகடன்—உணர்ந்தும் உரைக்க அஞ்சுகிறார்!

அதனால்தான் "தைரியம் வளர்ந்த சாமிமார்களை-நேத்திரம் திறந்தவர்களை-நியாயம் தெரிந்த இளைஞர்களைக் காணீர்" எனப் பாரதியார் பாட்டு வாயிலாகக் காட்டியிருக்கிறோம்.

அறிவும்—படிப்பும்—அனுபவமும் பெற்ற இவர்களே "திராவிடத்தைக் காப்போம்" என முன்வர, இவ்வளவு தயங்குவார்களேயானால்-விடாப்பிடியாக ஆரியத்தை அனுஷ்டிக்கிற பார்ப்பனப் பெரியவர்களும், இளைஞர்களும் திருந்துவது எப்படி என்றுதான் வருந்துகிறோம்.

அண்ணாவும் கழக நண்பர்களும் வெற்றி பெற்ற போது, என் வீட்டுக்கு வாழ்த்துகூற வந்த கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள், "தமிழ் வென்றது! தமிழுக்குப் பெருமை தந்த தி. மு. க. வென்றது!!" என வாழ்த்தினார். மகிழ்ந்தார். உணர்ச்சிகளைக் கொட்டினார். கட்டிப் பிடித்துக்கொண்டார். ஆனாலும் அவர்கள் எல்லாம் அண்ணா கூறுவது போல...... "பிடியிலிருந்து தப்பி விடுகிறீர்களே!"—என்ன செய்வது?

"திராவிடத்தைக் காப்போம்" என்கிறது கல்கி!... எப்படிக் காப்பது? யாருடன் கூடிக் காப்பது? வட நாட்டோடு சேர்ந்து காப்பதா? போரிட்டு மீட்பதா?......முழு உருவத்தைக் காட்டவில்லையே; கல்கி!...முகத்தைத் திறந்து உடனே மூடிக் கொண்டால் முழு அழகை எப்படி ரசிக்க முடியும்? எவ்வளவு நேரந்தான் ஆவலைத் தூண்டிக் கொண்டேயிருப்பது—அலுத்து சலித்து விடுவதற்குள் அருகிலே வரவேண்டாமா?

இல்லையேல்...

"சாதிகள் சேருது; சண்டைகள்
தொலையுது—
நல்ல காலம் வருகுது"

—என்ற வரிகளுக்குப் பொருள் இல்லாமற் போய்விடுமே பொன்முடி!

"இந்தப் பத்து வருடம்தான் பார்ப்பனரும் மற்ற சமூகத்தாரும் ஒன்று படுவதற்கு ஏற்ற ஒரு கால கட்டம் பிறந்திருக்கிறது. அதுவரையில்தான் தி. மு. கழகம் பிறருடைய துணையைக் கேட்டுப் பெறுகின்ற கட்டம் இருக்கும். அதன் பிறகு பிறர் உதவி இல்லாமலே தி. மு. கழகம் தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் கட்டம் பிறக்கும்!"

[அண்ணா பேச்சு; நம்நாடு 13-4-57]

மேலே கண்ட வாசகங்களை சீர்தூக்கிச் சிந்திக்கின்ற பார்ப்பன இளைஞர்கள் "நல்ல காலம் பிறக்குது!" என்ற நம்பிக்கையைப் பெறாமலிருக்க முடியுமா?...

"பத்தாண்டுகாலம்—ஒன்றுபடுவதற்கேற்ற ஒரு கால கட்டம்!"

—வேதபுரத்தாருக்கு அண்ணா சொல்லும் நல்ல குறி!

அதைக் கேட்போர் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் நன்மை விளைத்தவராவர்! கேளாதோர் பழியிலிருந்து மீளாதோர் எனப் பட்டம் பெறுவர்!

"குடு! குடு! குடு! குடு!" என அலுவலக இளைஞன் அவசரப் படுத்துகிறான்—அச்சியற்றி உனக்கு இதை அஞ்சலில் அனுப்ப நேரமாகி விட்டதாம்—பிற அடுத்த மடலில்!...

அன்புள்ள
நண்பன்.

பொன்னம்பலனார் மலேயா பயணம்!

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள், கடல் கடந்த நாட்டிலே கொள்கை விளக்கம் தர, 21—5—57 அன்று சென்னையிலிருந்து புறப்படும் எஸ். எஸ். ரஜூலா கப்பலில் மலேயா நாடு செல்லுகிறார்கள்.

அறிவியல்மேதை ஆர்க்கிமிடிஸ் . . .

2-ம் பக்கத் தொடர்ச்சி

லும் ஆயுதம் என்பது மிக மிக உண்மை.

ஆர்க்கி:—நன்றி அரசே! முக்கோணங்கள், நாற்கரங்கள் ஆகியவற்றின் பண்மை ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்...நான் ஆய்கூடத்திற்குச் செல்லவேண்டும்... லென்ஸ் வைத்துக்கொண்டு மதில்மீது வீற்றிருக்கும் என்னுடைய மாணவர்கள் கப்பல்களை இனிமேல் அணுகவிடமாட்டார்கள்...கவலைப்படாதீர்கள்...நான் வருகிறேன்.

[ஆர்க்கிமிடிஸ் செல்லுவதை நன்றியுணர்ச்சியோடு பார்த்துக்கொண்டு சிறிது நேரம் மெய் மறந்து உட்கார்ந்திருக்கிறான் ஹீரோ மன்னன். பிறகு ஏதோ ஒரு அலுவலில் ஈடுபடுகிறான். திடீரென்று நகரம் அல்லோல கல்லோலப்படுகிறது. எதிரிப்படைகள் நகருக்குள் நுழைந்துவிட்ட செய்தியை போர்வீரன் ஒருவன் ஓடிவந்து தெரிவிக்கிறான். ஹீரோ, மன்னன் திகைத்துப் போய் செய்வதறியாமல் விழிக்கிறான். அதற்குள் மார்செல்லஸ் படைவீரர்களோடு ஹீரோவின் அறைக்குள் நுழைகிறான்.]

மார்செல்லஸ்:—ஹீரோ, சிங்கம் குகையிலேயே பிடிபட்டுவிட்டது...ஆர்க்கிமிடிசல்ல; அவனைவிட அற்புத சக்தியும் இனி உம்மைக் காப்பாற்ற முடியாது. எரியாத பாய்களால் கட்டப்பட்ட பாய்மரங்களும் கிரேக்கத்தில் பிறந்துவிட்ட சில புல்லுருவிகளும் உன் வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்துவிட்டன...(பக்கத்தில் நிற்கும் போர்வீரனைப் பார்த்து) டேய், நீ போய் ஆர்க்கிமிடிஸ் எங்கிருந்தாலும் அழைத்துவா!...ஹூம்... போ...சீக்கிரம்!

★

[ஆர்க்கிமிடிஸ் தரையில் உட்கார்ந்து முக்கோணங்களும் நாற்கரங்களும் போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கிறார். போர் வீரன் உள்ளே நுழைகிறான். அதை அவர் கவனிக்காமல் அவருடைய வேலையிலேயே ஈடுபட்டு இருக்கிறார்]

போர்வீரன்:—ஆர்க்கிமிடிஸ்...!

(பதில் இல்லை)

போர்:—ஆர்க்கிமிடிஸ்...(அவர் தோளை உலுக்குகிறான். அவர் தலை நிமிர்ந்து பார்க்கிறார்.) நீ உடனே என்னோடு வர வேண்டும். அரசாங்கக் கட்டளை இது!

ஆர்க்கி:—அரசாங்கக் கட்டளையாயிருந்தால் எனக்கென்ன? என் கணக்கிற்கு விடை காணும்வரை கட்டளைக்குக் கீழ்ப்படிய முடியாது... போ...(மீண்டும் வேலையில் ஈடுபடுகிறார்.)

போர்:—அழைப்பது ஹீரோ மன்னரல்ல! மார்செல்லஸ்! (போர்வீரன் வார்த்தைகளை அவர் கவனிக்கவேயில்லை; படம் வரைந்து கொண்டேயிருக்கிறார்.) என்ன திமிர்! வெற்றி பெற்ற ரோமானிய வீரனை தோல்வி தழுவிய கிரேக்கன் அவமதிப்பதா? ஏற்றுக்கொள் என்னுடைய தண்டனையை! (உரையிலிருந்து கத்தியை உருவி ஆர்க்கிமிடிசின் மார்பில் செலுத்துகிறான். ஆர்க்கிமிடிஸ் ஐயோ, அப்பா' என்று அலறிக்கொண்டே பிணமாகச் சாய்கிறார். போர்வீரன் வாளைக் கையில் ஏந்திய படியே விரைந்து செல்லுகிறான்.)

★

[மார்செல்லஸ் வீற்றிருக்கிறான். இரத்தக் கறை படிந்த கத்தியோடு போர்வீரன் நுழைகிறான்.]

போர்:—கொன்று விட்டேன் கொடியவனை! கப்பல்களை எரித்த கயவனைச் சாய்த்துவிட்டேன்...

மார்செல்லஸ்:—என்ன...?

போர்:—கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தான் ஆர்க்கிமிடிஸ்! கத்தி அவன் இருதயத்தைச் சுவைத்துவிட்டது...

மார்செல்லஸ்:—முட்டாள்! என்ன காரியம் செய்தாய்? என் முன் நிற்காதே; போய் விடு! அறிவியல் மேதைக்கு மரியாதை செய்ய—அவரைக் கண்டு, பேசி, அளவளாவி மகிழ—அழைத்து வரச் சொன்னேன்...போர் வீரனுக்கு புத்தி குறைவு என்பதை நிரூபித்து விட்டாய்... அழிவு வேலைக்கு மட்டுமே பயிற்சி பெற்ற நீ, அறிவுலகத் தூதுவனை அழைத்துவர அருகதையற்றவன் என்பதை அறியாமல் போன நான்தான் முட்டாள்...சிந்தனை வயலாம் மூளையிலே பாய்ந்து சிறந்த எண்ணங்களை விளைவித்த அந்தப் பேரறிஞனுடைய செங்குருதியைக் கட்டாந்தரையில் கொட்டிப் பாழ்படுத்திய பேதையே, போ!...படைத்தலைவர்களே, இராணுவ மரியாதையோடு ஆர்க்கிமிடிசின் சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகள் நடைபெறட்டும். கிரேக்க ரோமானியப் படைகள் பகையுணர்ச்சி மறந்து, சவ அடக்கத்தில் கலந்து கொண்டு மரியாதை செய்யட்டும்...ஆர்க்கிமிடிஸ் போன்ற மேதைகள் ஒரு நாட்டிற்கோ இனத்திற்கோ சொந்தமானவர்கள் அல்ல; நாடு, இனம் காலம்—ஆகியவற்றையெல்லாம் வென்று வாழும் அமரர்கள்!

★

[முதல் காட்சியே மீண்டும்! சிசரோ ஆர்க்கிமிடிசின் கல்லறையின் முன் பரிவாரங்களோடு நின்றுகொண்டிருக்கிறார்]

சிசரோ:—ஆர்க்கிமிடிஸ் அமரரானார்! அவருடைய நினைவாக, வேற்று நாட்டவர் என்பதெல்லாம் மறந்து மார்செல்லஸ் கல்லறை அமைத்தார்; நாகரிகத்தின் இரு கண்களான ரோமாபுரியும் கிரேக்கமும் ஆர்க்கிமிடிசின் அறிவு ஜோதியில் ஐக்கியமாகிவிட்ட உண்மையை வரலாற்று ஆசிரியர்களுக்கு என்றென்றும் இந்தக் கல்லறை விளக்கிக்கொண்டிருக்கும். வரலாற்று முக்யத்துவம் வாய்ந்த கல்லறையைக் கண்டுபிடித்து உலகுக்குச் சொன்ன பெருமை நம்முடையது. வாழ்க ஒற்றுமை —வளர்க அறிவு!

★

[புளூடார்க் எழுதிய வரலாற்றுக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டது.]

விற்பனையாகிறது!

'முரசொலி'யில் தொடர்கதையாகப் படித்தீர்கள்-
இப்போது திரை ஓவியமாகப் புத்தகத்தில் படியுங்கள்!

: புதையல் :

திரைக் கதை வசனப் புத்தகம்

விலை 8 அணு : : கழிவு 40 சத வீதம்

[தேவையான பிரதிகளுக்கு கழிவு நீக்கி முன்பணம் அனுப்பவும். அல்லது வி. பி. யில் அனுப்ப வேண்டுமென்றாலும் தெரிவிக்கவும். முன்பணம் அனுப்புவோருக்கே முதல்சலுகை தரப்படும்.]

எம். கே. பதிப்பகம்,
த. பெ. 712. : : சென்னை—6.

விசித்திரக் கரு...

✲ 5-ம் பக்கத் தொடர்ச்சி

உண்மைக்கு விளக்கம் கண்டுபிடித்து விடுவேன் என்ற நம்பிக்கையில் கடிதம் எழுதியிருந்தாள். ஐயோ, கற்றறிந்தும், கண்களிருந்தும், முகத்திரண்டு புண்கள் பெற்றகுருடனுகிவிட்டேன்! நான் பட்டங்கள் பெற்று பயன் என்ன? ஆத்திரம் நேத்திரங்களை அழிக்கும் என்ற பால பாடத்தை மறந்து விட்டேனே பாவி" என்று முகத்திலே அறைந்து கொண்டான்.

இந்நேரம் மரகதம் என்ன ஆனாளோ என்று உள்ளம் பதைபதைக்க எழுந்த அவன் ஒரு தீவிர உணர்ச்சியுடன் தலை தெறிக்க ஓடினான் பஸ் நிலையத்திற்கு.

★

கருக்கல் நேரம், ஊர்போய்ச் சேரும்பொழுது ...... ஆனால் அவன் எதிர்பார்த்தது நடந்துவிட்டது.

"பாவிப் பொண்ணு! எவனோட சோரம் போச்சோ... அதுதான் வாயிலேயும் வயித்திலேயும் காண்பிச்சுட்டுது"

"அட செத்ததே செத்துது, புள்ளையைப் பெத்துப் போட்டுட்டாவது சாகக் கூடாது... இந்தப் பொடிசுங்கள் பண்ணின அக்ரமத்துக்கு பாவம், அந்தப் பச்சைச் சிசு என்ன பண்ணும்?"

"ஐயோ பாவம்! இந்தமாதிரியெல்லாம் பொண்ணுங்க தற்கொலை பண்ணிக்கிறதுனுலதான் போக்கிரிப்பசங்க தைரியமாயிட்டானுங்க"

"ஐய்யயோ! விழுந்ததே விழுந்தது; நம்ம கிணறுதானு அகப்பட்டது அதுக்கு... தண்ணியெல்லாம் பாழாப் போச்சுதே"

"எந்த ஷோக்குக்காரன் வந்தானே....படுபாவிப்பயல்... இப்போ எவ தலையிலே கை வைச்சிருக்கானே, அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்... கடைசியிலே பாவ புண்யமெல்லாம் நம்ம தலையிலேதானே விழுது"

செத்த பிரேதமாக, நாதியற்றுக் கிடந்த மரகதத்தைச் சுற்றியிருந்தவர்கள் பேசிய பேச்சு, தியாகுவின் இதயத்தைக் கோடரியால் பிளந்தது. கடல் இரைச்சலும், காட்டகத்துக் கூச்சலும் அவன் நெஞ்சத்தில் ஓங்காரமிட்டன. அந்தப் பரிதாபக் காட்சியை காண சகிக்க முடியாமல் ஒரு ஓரமாகப் போய்நின்று குலுங்கிக்குலுங்கி அழுதான்.

கொஞ்ச நேரத்தில் சிதை வளர்த்தார்கள். அடுக்கிய விறகுக் கட்டைகள்மீது அந்த சிரித்த முகத்தை, அழகு விரித்த மேனியை, மரித்த கோலத்திலே கிடத்தினர்கள்!

✲ 12-ம் பக்கம் பார்க்க

பாடுபடும் நெசவாளி பட்டுப் பூச்சியா?

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

லாம்; சரித்திரமும் சொல்லிச் சொல்லிப் பெருமை அடைகிறது. ஔரங்கசீப்பினுடைய மகள், ஏழு தமிழ் நாட்டு கைத்தறிச் சேலைகளை ஒரே நேரத்தில் உடுத்தியிருந்தாலும், அவளுடைய அங்கங்கள் வெளியிலே தெரிந்ததாம் அவ்வளவு மெல்லிய ஆடைகளை நெய்து பெருமை பெற்றிருந்த தமிழகம்—ஒரு கணையாழிக்குள்ளே ஒரு சேலையை வைத்து மூடிவிட முடியும்; பத்திரப்படுத்திவிட முடியும்; என்ற அளவுக்கு மெல்லிய ஆடைகளை நெய்த தமிழகம்—பாம்பினுடைய தோல்; அது உரித்துப் போடுகிறதே சட்டை; அதைவிட மென்மையான ஆடைகளைத் தரக்கூடும் என்று பெருமை பெற்றிருந்த தமிழகம்—இன்றைய தினம் வாடிக் கிடக்கிறது. 1000, 2000 ரூபாய் பெறுமான ஜரிகைச் சேலைகளை நெய்து தருகின்ற கைத்தறி நெசவாளி, தன்னுடைய மனைவிக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் செலவழித்து துணி எடுத்துத் தர முடியாத அளவுக்குக் கந்தல் துணிகளையே அணிந்து, மனைவி மக்களுடன் வாழுகின்ற கொடிய வாழ்க்கையைத்தான் அமைத்துக் கொள்ள முடிகிறது. பட்டு தருகின்ற பட்டுப் பூச்சி வதைக்கப் படுவது போலவே பட்டாடை தருகின்ற நெசவாளியும் வதைக்கப் படுகிறான்.

நான் இந்தத் தொகுதியினுடைய சட்ட மன்ற உறுப்பினன் என்ற முறையிலே, எனக்குத் தரப்பட்டிருக்கின்ற மனுக்கள் பலவற்றைப் படித்த நேரத்தில், அவைகளில் பல கைத்தறி நெசவாளிகள் வீடு கட்டிக்கொள்ள முடியாத நிலைமையில்—ஒரு வீட்டிலே பல குடும்பங்கள் நெருக்கி அடித்துக் கொண்டு வாழுகிறோம்; அவதிப்படுகிறோம்; கண்ணீர் வடிக்கிறோம்; எங்களுக்கென வீடுகட்டிக் கொள்ளக்கூட உரிமை இல்லை; எவ்வளவோ காலி இடங்கள், தரிசு நிலங்கள் கிடக்கின்றனவே; அவைகளாவது எங்களுக்குப் பயன்பட — உரிமை கிடைக்க அதிகாரிகளைக் கலந்து உறுதுணை செய்வீர்களா?— என்று பல வேண்டுகோள்கள் என்னிடம் குவிந்திருக்கின்றன.

இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? இந்த நாட்டில் தொழிலாளர் வர்க்கம் சரியாகக் கவனிக்கப்படவில்லை. நாட்டு மானத்தைக் காக்கும் அவர்களின் நலனில் அக்கரை கொள்ள ஆளுங் கட்சியினர் தயங்குகிறார்கள். இந்தத் தயக்க நிலைமையிலே இருந்து இந்த நாட்டுக் கைத்தறி நெசவாளர்களை விடுவிப்பதற்கான முயற்சியிலே ஆட்சியாளர் ஈடுபட வேண்டும் என்பதைத்தான், இந்த விழாவில் நெசவாளர்களின் சார்பிலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்சினையை அடிக்கடி அமைச்சர்களிடத்திலும், சட்ட மன்றத்தினரிடமும் எடுத்து எடுத்துச் சொல்லும்! அவர்கள் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து தருகிற வரையிலே கோரிக்கைகளைச் சமர்ப்பித்துக்கொண்டே இருக்கும்! அதுபோலவே இந்த வட்டாரத்து அதிகாரிகளிடத்தில்—இந்தக் கூட்டத்துத் தலைவர் போன்றவர்களிடத்தில்—கைத்தறியாளர்களின் கஷ்டங்களை எடுத்துச் சொல்லுவோம். அவர்களோடு கூடி—கலந்து பேசி—கைத்தறியாளர்களின் தொல்லைகளை நீக்கப் பாடுபடுவோம் என்று இவ் விழாவில் உறுதி கூறுகிறேன்.

'குதிரை கீழே தள்ளியது மல்லாமல் குழியும் பறித்தது' என்று சொல்லுகிற பழமொழி போல—விசைத்தறி என்கின்ற பெயரால் ஒரு புதிய முறை இன்றைய தினம் கைத்தறி நெசவாளர்களுடைய கழுத்தை அறுப்பதற்காகப் புகுத்தப்படுகிறது. அந்த விசைத்தறி புகுத்தப்பட்டால் கைத்தறியையே நம்பி வாழும் ஏராளமான குடும்பங்கள் வேதனைக்கு ஆளாகும் என்பது நன்றாகத் தெரிந்துவிட்டிருக்கிறது. ஒரு விசைத்தறி புகுத்தப்படுகின்ற நேரத்தில் அதனால் பத்து கைத்தறிகள் அழிக்கப்படும்! இதை நாம் விளக்கமான முறையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம் அரசாங்கத்துக்கு. நாம் மாத்திரமல்ல; நாடெங்கிலுமுள்ள கைத்தறி நெசவாளர்கள் அத்தனை பேரும்—'விசைத் தறியைப் புகுத்த வேண்டாம்' என்று பொதுக் கூட்டங்கள் மூலமாகவும், மகாநாடுகள் வாயிலாகவும், தலைவர்கள் மூலமாகவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி எடுத்துச் சொல்லியும்கூட அரசாங்கம் கொஞ்சம் கூட தங்குதடை இல்லாமல்—மிக வேகமாக விசைத்தறியைப் புகுத்திவிடும் காரியத்திலே ஈடுபட்டு வருகிறது.

கோவை நகரம் போன்ற இடங்களிலே விசைத்தறி மெல்ல புகுந்து கொண்டிருக்கிறது. அதன் காரணத்தால் வேலை வேண்டுமானால் சுலபமாக முடியலாம். ஆனால், பல்லாயிரம் நெசவாளர் பட்டினியால் சுருண்டு மடிந்து போவார்கள் என்பது மட்டும் நிச்சயம்! மனிதனின் வேலையைக் குறைக்கின்ற — சிரமத்தைக் குறைக்கின்ற புதிய முறைகள்; புதிய விஞ்ஞான முறைகள் புகுத்தப்படக்கூடாது—என்கிற கருத்தை நான் அடிப்படையாகக் கொண்டு இதைக் கூறவில்லை. கைத்தறி முறை எப்போதும் இந்த நாட்டிலே இருந்துதான் தீர வேண்டும் என்றும் வாதாடவில்லை. கலையழகு மிக்க கைத்தறி ஆடைகளை அளிக்கின்ற சக்தி ஆலைகளுக்கு இல்லாததால்...பெரும்பாலோர் ஈடுபடுகிற தொழிலாக இல்லாமற் போயினும் "கைத்தறி" அறவே நசித்துவிட யாரும் விரும்ப மாட்டார்கள். அது மட்டுமன்றி; தற்காலிகமாக கைத்தறி நெசவாளர்கள்—தறியை மட்டுமே நம்பி வாழுகின்ற 'பட்டாளி மக்கள் — திராவிடப் பெருங்குடியினர் வாழ்வு பெற — தங்களுக்கென அமைத்துக் கொண்டிருக்கிற தொழிலை சர்க்கார் அழித்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறோம். இந்தத்தொழிலே எப்போதும் நிரந்தரமாக இருக்க வேண்டும், கடல் உள்ள அளவும்—நிலம் உள்ள அளவும்—சூரிய சந்திரர்கள் உள்ள அளவும்—"இந்தா விபீஷணா, லங்காபுரிராஜ்யம்!" என்று கொடுத்தானாமே இராமன், விபீஷணனிடத்தில், லங்காபுரியை—அதைப் போல இந்த உலகம் உள்ள அளவும் கைத்தறிதான் இருக்க வேண்டும்; மில் தொழிலையும், விஞ்ஞான முறைகளையும் எதிர்க்கிறோம் — என்று நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் கூறுவதெல்லாம் தற்காலிகமாக கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள்; அவர்கள் தங்களுக்கென அந்தத் தொழிலை ஆக்கிக் கொண்டார்கள்; அந்தத் தொழிலை விட்டு விட்டு வேறு வேலையிலோ—தொழிலிலோ புகமுடியாத அளவுக்கு வழியற்றவர்களாகி விட்டார்கள். ஆகவே அத்தகையோர் தற்காலிகமாக—அவர்களது சந்ததி வேறு தொழிலிலே ஈடுபடுகிற வரை வாழ வேண்டாமா; அதற்கு வகை செய்ய வேண்டாமா; என்றுதான் கேட்கிறோம்.

திடீரென விசைத்தறி புகுத்தப்பட்டால்—மில் துணிகளுக்கு ஆக்கமளிக்கப்பட்டால்—கைத்தறியை மட்டுமே நம்பி வாழுகின்ற பல்லாயிரம் குடும்பங்களின் கதி என்ன என்று கணக்குப் போட்டு பார்க்கச் சொல்லுகிறோம். சர்க்காரும் அவர்களது கண்ணீரைத் துடைப்பதற்கான முழு முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் கைத்தறி நெசவாளர்கள் குடும்பம் 'குடும்பமாகச் சாகின்ற பாதகத்துக்கு—பழிக்கு சர்க்கார் தன்னை

விரைவில் விற்பனைக்குக் கிடைக்கும்!

உயர்ந்த எண்ணங்கள் குலுங்கும் கருத்துக் கருவூலங்கள்

மாறன், எம். ஏ.

— எழுதிய —

ஏன் வேண்டும்
இன்பத் திராவிடம்?

அறிஞர் அண்ணா நாவலர் நெடுஞ்செழியன்-
ஆகியோரின் முன்னுரையுடன்

விலை : ரூபாய் 1—50

★

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி. பி. டி.

— எழுதிய —

அபிசீனிய அடிமை

மு. கருணாநிதி அவர்களின் முன்னுரையுடன்
விலை ரூபாய் 1.

விபரங்களுக்கு ;

முத்துவேல் பதிப்பகம்,

77, மதுரை ரோடு, : : திருச்சி—8.

ஆளாக்கிக் கொள்ள நேரிடும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்."

கைத்தறி நெசவாளருக்காக செய்யப்படும் நன்மைகள் அத்தனையும், 'அம்புலியைப் பிடித்துத் தா' என்று அழுகிற குழந்தையிடம், 'இதோ பிடித்துத் தருகிறேன்' என்று தாயார் கூறி ஒரு கண்ணாடியைக் கையிலே கொடுத்து, அதிலே அம்புலியைக் காட்டி, 'இதோ பார் அம்புலி; இதோ பார் அம்புலி!' என்று சொல்லுவது போல 'எங்களுக்கு உரிமை தரவேண்டும்; வாழ்வு தரவேண்டும்' என்று அழுகின்ற கைத்தறி நெசவாளர்களிடத்திலே, ஆட்சியாளர்கள் ஏதேதோ குருட்டுசமாதானங்களைச் சொல்லி 'நாங்கள் உங்களுக்காக இன்னன்ன விழாக்களை நடத்துகிறோம்; கைத்தறி வாரங்களைக் கொண்டாடுகிறோம்; அவைகளிலே அமைச்சர்களாகிய நாங்களே கலந்து கொள்ளுகிறோம்' என்கின்ற கண்ணாடியை மாத்திரம் காட்டுகிறார்கள். அழுகின்ற கைத்தறி நெசவாளன் 'இதனால் திருப்தி பெற முடிகிறதா?, அழுகின்ற நெசவாளி–குடும்பம் குடும்பமாகச் சாகின்ற நெசவாளி—தற்கொலை செய்து கொள்ளுகின்ற நெசவாளி—அத்தனை பேரும் அந்த வேதனையிலிருந்து விடுபட வேண்டுமானால், வடநாட்டு ஆலைகளும் துணிகளும் ஒடுக்கும் நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமானால், விசைத் தறி போன்ற திட்டங்களை வாபஸ் பெற்று–லுங்கி, கரை போட்ட வேஷ்டி. சேலை செய்கின்ற உரிமையை கைத்தறி நெசவாளருக்கே தருகின்ற சட்டங்களை துணிவோடு கொண்டு வரவேண்டும். ஆனால் நாம் பலமுறை கேட்டுவிட்டோம்; சட்ட மன்றத்திலும் கேட்டுவிட்டோம் அந்தத் திட்டம் என்ன ஆயிற்று என்று! அதற்கு மௌனம் தான் பதிலாகத் தரப்படுகிறது; பேசாமடந்தைகளாகத்தான் மந்திரிகள் காட்சியளிக்கிறார்கள். 'கவர்னருடைய உரையிலும் அதைப் பற்றிய ஜாடைமாடைகூட காணப்படவில்லை.

ஆகவேதான் நான் சொல்லுகிறேன், கைத்தறி நெசவாளர்கள் தங்களுடைய குறைகளை தீர்த்துக் கொள்வதற்கு இந்த சர்க்காரை மாத்திரம் நம்பிப் பயனில்லை; தங்களுடைய ஒற்றுமையை அதிகமாக வளர்த்துக் கொண்டு, கைத்தறி இயக்கத்தை வலுவோடு வளர்த்துக் கொண்டு, அதன் காரணமாக எழுப்புகின்ற உரிமைக் குரல் மத்திய சர்க்காருடைய காதிலே ஏகமனதாக ஒலிக்கும்படி—அவர்களது நெஞ்சிலும் தைக்கும்படிச் செய்ய வேண்டும்.

மேலும் பொது மக்கள் காட்ட வேண்டிய, கடமை ஒன்று உண்டு; கூடுமானவரையில் தாங்கள் உடுக்கின்ற உடைகள் — குடும்பத்திற்கு எடுக்கின்ற ஆடைகள்–நண்பர்களுக்கும் சிபார்சு செய்கிற ஆடைகள்—அத்தனையும் கைத்தறி ஆடைகளாகவே இருக்க வேண்டும். 'கைத்தறித் துணிகளாகவே உடுப்போம்' என்று உறுதி செய்துகொண்டு ஒத்துழைப்பை நல்குவார்களேயானால். நிச்சயமாக கைத்தறியாளர்களுடைய துயர் துடைப்பதற்கு ஒரு மார்க்கம் கண்டவர்களாவோம்—என்பதை கைத்தறி நெசவாளர்களது சார்பாக நான் பொது மக்களுக்கு சிபார்சு செய்கிறேன். நாம் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்! அவர்கள் நம்முடைய மானத்தைக் காப்பாற்றுபவர்கள்! இன்றைய தினம் அத்தனை பேரும் வலுவிலே மரணத்தை அணைத்துக் கொள்பவர்களாக இருக்கிறார்கள்! ஓட்டைக் குடிசையிலே ஒன்பது குடும்பங்கள் ஒன்றாக இருக்கிறோம் என்று ஓலமிடுபவர்களை—அந்த வேதனையிலிருந்து காப்பாற்றுவதற்கு—அவர்களை விடுவிப்பதற்கு — அவர்கள் நம்மிலே ஒரு அங்கம்; நமது சமுதாயத்திலே அவர்களும் ஒரு பிரிவு; அவர்களே நாம்; நாமே அவர்கள்—என்கின்ற அளவுக்கு 'அந்த பரந்த உள்ளத்தோடு பொது மக்கள் அத்தனை பேரும், கூடுமானவரை 'கைத்தறித்துணிகளையே அணிவோம்' என்பதைதான் இந்த கைத்தறி வாரத்திலே உறுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொகுதியிலே இருக்கிற கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு கூடுமான வரையிலே நம்முடைய தாசில்தார் அவர்களும், இன்னும் இந்த வட்டாரத்திலே இருக்கிற அதிகாரிகளும், அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டும். தண்ணீர்பள்ளி ராஜேந்திரம் போன்ற இடங்களிலேயுள்ள நெசவாளர்கள் தாங்கள் இருப்பதற்கு வீடு இல்லை; சில இடங்களிலே வீடு கட்டிக்கொள்ள அனுமதி வேண்டும்—என்று கேட்கிறார்கள். அதற்கான முயற்சியிலே நம்முடைய தாசில்தார் போன்றவர்களெல்லாம் உறுதுணையாக இருந்து அவர்களுக்கு உதவவேண்டும் என்று கேட்டுக் கொண்டு 'கைத்தறி நெசவு ஓங்குக! கைத்தறியாளர் வாழ்க!' என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

அண்ணா பற்றி பம்பாய் ஏடு!

அண்ணாதுரை, தான் சட்டசபைக்கு நுழைந்ததைச் சரியென்று காட்டிவிட்டார். ஏனெனில் ஒவ்வொரு தடவை அவர் சொற்பொழிவாற்றும்போதும் முழுச் சபையின் கவனத்தையும் மட்டுமன்றி; 'டிரஷரி பெஞ்சின்' (மந்திரிகள் அமர்ந்திருக்கும் பெஞ்சு) கவனத்தையும்கூட அவர் தன்பால் இழுத்து விடுகிறார்.

சட்டசபையில் அண்ணாதுரையின் சிறந்த சொற்பொழிவு — யு. கிருஷ்ணாராவ் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவருக்குக் கூறிய நல்வரவு—பேச்சுக் கலையின் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது. அவருடைய அரசியல் எப்படியிருந்த போதிலும் அந்த ஒரு சொற்பொழிவானது இன்றைய தமிழ்க் கலாச்சாரத்தின் உயர்ந்த அடையாளமாக விளங்கிற்று; அன்று அவர் பேச்சில் திகழ்ந்த பெருந்தன்மை; சிந்தனைத் தெளிவு; பண்பாடு—முதலியன அப்படி இருந்தது!

அண்ணாதுரை, சட்ட சபையில் நடந்துவரும் விவாதங்களின் தரத்தை நிச்சயம் உயர்த்தத்தான் போகிறார்.

—'கரண்ட்' (8—5—57) பம்பாய்,

★ பிறைவானம்..

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

அதோ, கிராமத்துத் தம்பிகளைப் பாருங்கள்! இரட்டைச் சடைப் பின்னலோடு, பலவண்ணப் பட்டாடை உடுத்தி, வண்ணாத்திப் பூச்சிகள்போல் பள்ளிக்குப்பறந்து செல்லும் பட்டணத்துக் குழந்தைகளைக் கண்டு கண்டு பூரிக்கும் உங்கள் கண்கள் அங்கே பார்க்க ஏன் கூசுகின்றன? அங்கே வயலுக்குக் கஞ்சிக் கலயம் தூக்கிச் செல்லும் சிறுமிகளையும், மாடு மேய்க்கும் தம்பிகளையும், நல்ல உணவில்லாத—உடையில்லாத ஏழ்மையின் பிம்பங்களையும்தான் காணுகிறோம்; கண்டு கதறுகிறோம்! புழுதிமண்ணிலே தங்கள் வாழ்க்கையைத் துவங்கும் அந்தக் குழந்தைகள், அதிலேயே உருண்டு, புரண்டு, வளர்ந்து, வாழ்ந்து, மடிந்துவிட வேண்டுமா? என்ன அக்கிரமம் இது? யார் வகுத்த நியதி இது? ஏன் இந்த ஓரவஞ்சனை? நான் ஒரு பைத்தியக்காரன்; யாரைக்கேட்கிறேன் பதில்! யாராலும் சொல்ல முடியாது, அழகான பொன்மொழிகள் சிலவற்றைத் தவிர! ஆனால் நானும் மற்றோரும் என்ன செய்ய வேண்டும்? அது மட்டும் எனக்கு நன்றாகத் தெரிகிறது! அந்த உண்மைதான் என்னை "போ...போ...போ!..." என்று விரட்டுகிறது.

நான் போகிறேன்...நான் கற்ற கல்வி போதும்; 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றாரே வள்ளுவர். கற்றபடி செயலாற்ற வேண்டாமா? ஆகவேதான் நான் செல்கிறேன். இல்லை; இல்லை; "போ... போ...போ!" என்று துரத்துகிறது என்னை எனது இலட்சியம்!

—முத்து"

அதே சமயம் "ஐயையோ! முத்து!...முத்து!" என்ற பயங்கர அலறல் ஒன்று கீழே இருந்து எழும்பியது. திடுக்கிட்டுப் போன மாணவர்கள் என்னவோ ஏதோ என்று நடுங்கி ஓடினர். மாடிப் படிகளில் தடதடவென்று யாரோ ஏறி ஓடிவரும் காலோசை எழுந்தது.

ஃ

சாம்பசிவக் கவுண்டருக்கு பதட்டத்தைத் தரக்கூடிய முறையில் தான் கல்லிலே பறந்து வந்தது கடிதம் என்றாலும், அடுத்த கணத்தில் பண்ணையாரின் முகத்தில் பயம் மறைந்து, பயங்கரக்கோபம் தோன்ற ஆரம்பித்து விட்டது. அவரது கூர்த்த விழிகள் தோட்டத்து வாயிலைத் தாண்டி, எங்கிருந்து பறந்து வந்திருக்கும் அந்தக் கல் என்ற ஆராய்ச்சியில் இறங்கி விட்டன.

"எசமான், எசமான்! அதோ பாருங்கள்...அதோ பாருங்கள்!..." —என்று ஏதோ ஒன்றைக் காட்டினார் கணக்கப் பிள்ளை.

பண்ணையார் பார்த்தார். தூரத்திலே தோப்புக்கு இடையிலே நடந்து சென்று கொண்டிருந்த உருவம் ஒன்று அவருக்குப் புலப்பட்டது.

மறுகணம் பண்ணையாரின் சர்வாதிகாரத்தனம் தன் கடமையைச் செய்தது.

அந்தக் காட்டுராஜா தர்பார், கண நேரத்தில் கழியோடு கூடிய முரடர்கள் சிலரை அவரது பங்களாவிலிருந்து வெளியேற்றி—மூச்சுத் திணற ஓட வைத்து—தோப்பிலே பண்ணையாரின் கண்களில் சிக்கிய உருவத்தின் பின்னால் பதுங்கச் செய்து—கழியால் தாக்கச் செய்து—"ஐயோ!" என்ற பயங்கர அலறலோடு அந்த உருவத்தைக் கீழே சாய்க்கவும் செய்து—வெற்றிப் புன்னகை பூத்தது!

—சொர்ணம்.

(அடுத்த வாரம் முடியும்.)

சென்ற இதழ் தொடர்ச்சி

கவுண்டங் கோட்டையைப் பற்றி உங்களுக்குச் சொல்லவில்லையே!

அதைப் பற்றி இப்போது யார் கேட்டார்கள்? 'எனது இலட்சியம்' என்று எழுதப்பட்ட கடித உரையை வைத்துவிட்டு, மாய மாய் மறைந்து போயிருக்கிருன் முத்து; அவன் எங்கே? இருக்கிருனு? அல்லது இருப்பினும் கொடிய நெஞ்சுகொண்ட மாந்தர் வசிக்கும் இவ்வுலகில் 'எனக்கென்ன வேலை' என்று இறந்தே போனுனு? அதைச் சொல்லுங்கள் முதலில்!—என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது.

இருந்தாலும் முத்துவின் சரித்திரத்திற்கும் கவுண்டங் கோட்டைக்கும் மிக மிக நெருங்கியத் தொடர்பு இருக்கிறது. ஆகவே தான் அங்கு உங்களை அழைத்துச் செல்ல வேண்டிய நிலையும் தானே ஏற்பட்டிருக்கிறது.

கவுண்டங் கோட்டைதான் முத்துவின் பிறந்த கிராமம்; குக்கிராமம். ஆகாயத்திலிருந்து—பறவைக் கண்ணேட்டம் என்பார்களே, அப்படிப் பார்த்தால் குடிசைகள் பலவும், கோபுரம் ஒன்றும், அந்தக் கோபுரத்திற்கும் உயரமான இரண்டடுக்கு மாடி ஒன்றும் தெரியும்!

கோபுரம்—எல்லாம் வல்ல சிவபெருமானின் கோயில் வாசல். ஆண்டவனின் நேர் வாரிசுபோல் அங்கே ஆதிக்கம் செலுத்துபவர் கிருஷ்ணராம ஐயர். அவருக்கு அர்ச்சனை, புரோகிதம், தரகு, சோதிடம், ஆரூடம் — எல்லாம் தெரியும்.

அடுத்த இரண்டடுக்கு மாடி வீடு—பெரிய பண்ணைக்காரர் சாம்பசிவக் கவுண்டருடைய 'கோயில்'! கம்பீரமாக எழுந்து நின்ற அம் மாளிகையின் அஸ்திவாரமாக எத்தனை எத்தனையோ பாட்டாளிகளின் மிருக உழைப்பு புதையுண்டு கிடக்கிறதாம்.

எத்தனை அழகிருந்தென்ன; அற்புதமிருந்தென்ன; அருவருக்கத்தக்க ஏதோ இனம் தெரியாத அமைதி எப்போதும் அதிலே சூழ்ந்திருக்கும். ஏனென்ருல் பண்ணையாருக்கு செல்வமிருந்தது; செல்வாக்கு இருந்தது; நெஞ்சுரமும், நிமிர்ந்த பார்வையும், ஆணையிடும் அதிகாரமும்—நிறைய இருந்தது! இருந்தும்...அங்கே நிலவும் அந்த 'சுடுகாட்டு' அமைதிக்கு என்னதான் காரணம்? சூதும், வாதும், சூழ்ச்சித் திட்டமும், தவழ்ந்துகொண்டிருந்த அந்த மாளிகையில் குழந்தையின் தளிர் உடல் தவழ்ந்தது கிடையாது; மழலை இசை எழும்பியது கிடையாது. ஆண்டவன் சன்னிதானத்தில் பணத்தை வாரி இறைத்தார் பண்ணையார். பலனேயில்லை!

'அடடா, அப்படியா?' என்ற இரக்க மனப்பான்மை நம் உள்ளத்தில் ஏற்படுகின்ற இந்த நேரத்திலோ, அந்த மாளிகையில் ஒரு வியக்கத்தக்க மாற்றத்தை நாம் காண வேண்டியிருக்கிறது.

அமைதி குடிகொண்டிருக்கும் அங்கே—அனல் தகித்துக் கொண்டிருக்கிறது; ஆத்திரமும், ஆவேசமும் தத்தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட போட்டியிட்டுக் கொண்டிருந்தன!

என்ன காரணம்?

பண்ணையார் சாம்பசிவக் கவுண்டர் கோபத்தின் உச்சாணிக் கிளையிலே நின்று குதித்துக் கொண்டிருந்தார். கோபத்தில் அவர் முகம் இவ்வளவு கோரமாக இருக்கிறதே என்ற நினைப்பால் மட்டுமல்ல; அக்கோபத்தை அவ்வளவு சுலபத்தில் அடக்கிவிட முடியாது என்பதை நன்குணர்ந்தவர்கள் கை கட்டி வாய் புதைத்து விலகி நின்ருர்கள்!

பண்ணையார் கூண்டுக்குள் அடைபட்டுக் குமுறிக் குமுறி நடக்கும் காட்டுப் புலியைப் போல் இங்கு மங்கும் நடந்து கொண்டிருந்தார்.

"அயோக்கிய ராஸ்கல்ஸ்! ஒரு பயலை நிலத்திலே இறங்கவிடாதே! கூலி இல்லாம குடல் வற்றிச் செத்தாத்தான் இந்தப் பறக் கழுதைங்களுக்கு புத்தி வரும்! சட்டம் பேசுகிருனுங்களா, சட்டம்! இந்தச் சட்டம் நமக்கெல்லாம் எப்படியும் வளைந்து கொடுக்கும் 'ரப்பர்' என்கிறது தெரியாது போலிருக்கு!..."

—எரிமலையின் குமுறல் ஒரு முறை எழுந்து அடங்கி விட்டதைப்போல இருந்தது!

மேல் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு கொஞ்சம் முன்னேறி வந்தார் கணக்கப்பிள்ளை. "எச்மான்...இந்த நேரத்திலே ஆட்களை நிலத்தை விட்டு வெளியேற்றிஞ......நம்ப காரியம் தானே கெடும்?......ஊரெல்லாம் நடவு முடிஞ்சிப் போச்சுங்களே!..."

"சீ, சொன்னதைச் செய்யுமய்யா சோம்பேறி! என் நிலம் கரம்பு நிலமாப் போனுலும் பரவாயில்லை. இனிமே காலணு கூலித் தர மாட்டேன் ஒரு கழுதைக்கும்!..."

—இரண்டு அடி பின்னல் நகர்ந்துவிட்டார் கணக்கப்பிள்ளை.

'நாம் நாடு முன்னேற வேண்டுமானுல், ஜாதகத்தையோ—சோதிடத்தையோ நம்பிப் பயனில்லை. ஆகாயத்தை அண்ணந்து பார்த்து நட்சத்திரங்களைத் தேடியும் பயனில்லை! உழைப்பு... உழைப்பு....உண்மையான உழைப்புதான் அதற்கேற்ற மார்க்கம்!'

பங்களாச் சுவற்றில் மூலைக்கு மூலை நேருப் பண்டிதரின் படத்தை மாட்டிவைத்து, ஆசிய ஜோதியின் வனப்பை வாய் வலிக்கப் பேசும் பண்ணையார், 'அந்த ஜோதியின் ஒளிக் கிரணங்'களில் ஒன்ருன மேற்கண்ட சொற்களை ஏனே மறந்தார்; உழைப்பை ஏனே உதாசினம் செய்யவும் துணிந்தார்!

நிலத்தைப் பண்படுத்தி விட்டனர் பாட்டாளிகள். ஆனுல் விதை தூவுவதற்கு முன் ஏற்பட்ட விவசாயிகளுக்கான கூலிப் பிரச்சினைதான் பண்ணைக்காரரின் பண்படா இருதயத்தில் கோபத்தைப் பாய்ச்சி விட்டது.

காலமெல்லாம் அவருக்கென்றே உழைத்தவர்கள்; அவரது மாளிகைக்கு எலும்புகளையும் இரத்தத்தையும் குழைத்துக் கொடுத்தவர்கள்; 'ஆண்டை'யின் முகத்தில் பூரிப்பு தோன்றுவதே தாங்கள் பிறவி எடுத்ததின் இலட்சியம் என்று உழைத்து உழைந்து உருமாறிப் போனவர்கள்; ஒரே குடும்பத்தின் குதூகல வாழ்வுக்காக குருதி சிந்திய பல குடும்பங்கள்; ஆம்; அந்த உழவர் பெருங்குடி மக்களின் உழைப்பைத்தான் அலட்சியப் படுத்திவிட்டார் பண்ணையார்; நன்றி மறந்துவிட்டார்!

"ஆட்களை அழைத்துக்கொண்டு போமய்யா! ஏதாவது வாயைத் திறந்தாலும் கையைக் காலை வாங்கிவிடு! அப்போதுதான் திமிர் அடங்கும்!"

அரைவயிற்று உணவுக்கும் திண்டாடும் அந்த அன்ருடங் காய்ச்சிகளிடம் திமிர் ஏது? பரம்பரை பரம்பரையாய் அடிமையினும் கேவலமாய் அடங்கி வாழ்ந்த அவர்களிடம் முரட்டுத்தனம் எங்கிருந்து தோன்ற முடியும்?

இதை உணராத பண்ணையார் பசிக் கொடுமை தாங்காது பரிதவித்த ஏழைகள் கூலி உயர்வு கேட்டதை பயங்கரக் குற்றமாக எண்ணிக் கொண்டு போராடத் துவங்கிவிட்டார்.

"ஏன் பயப்படுகிறீர் கணக்கப்பிள்ளை? என்னை யார் என்று நினைத்தீர்? என் மனதிலே கோபம் படர்ந்துவிட்டால் கோபுரமே குப்பை மேடாகிவிடும்! இந்த குச்சி வீட்டுக் கொள்கைவாதிகள் எம்மாத்திரம்?....ம்....உழைப்பாம்...மிருக உழைப்பாம்...சக்திக்கு மீறிய உழைப்பாம்...என்ன செய்கிறேன் பார்!..."—என்று கண்களில் கோபக் கனல் பறக்கச் சொல்லிவிட்டு "ஹா.....ஹா.....ஹா..." என்று பயங்கரமாகச் சிரித்தார் பண்ணையார்.

"ஐயோ, எசமான்!" என்று திகிலோடு அலறினர் கணக்கப்பிள்ளை!

அதே சமயம் வேகமாகப் பறந்து வந்த கூரான சிறிய கருங்கல் ஒன்று 'டமால்' என்று சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்த படத்தில் தாக்கியது. காந்தியார் ஏர் பிடித்து உழும் தோற்றத்தில் இருந்த அப்படத்தின் கண்ணுடி நொறுங்கிக் கீழே விழுந்தது.

பண்ணையாரும் பதறித்தான் போய் விட்டார். கீழே விழுந்த கல் உருண்டு வந்து அவர் காலடியில் கிடந்தது. பண்ணையார் கல்லை எடுத்தார். கல் மட்டுமல்ல; அதோடு இணைத்துக் கடிதமென்றும் இருந்தது.

"எசமான்...!" என்று ஏங்கினர் கணக்கப் பிள்ளை!

நடுநடுங்கும் கைகளுடன் கடிதத்தைப் பிரித்தார், பண்ணையார்.

பண்ணையாருக்கு பதட்டத்தை மட்டுமல்ல; பயங்கரம் ஒன்றையும் சுமந்து கொண்டு வந்து குதித்த அந்தக் கடிதத்தை அப்படியே விட்டு விட்டு, நகரத்துப் பள்ளி விடுதி அறையில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய கடிதம் ஒன்று காத்திருக்கிறதே—அங்கு செல்வோம்!

✻

தமிழாசிரியர் கடிதத்தை எடுத்தார்; படித்தார்.

"எனது இலட்சியம்! தமிழாசிரியர் இந்தத் தலைப்பை மட்டும் தந்துவிடவில்லை. அதே நேரத்தில் என்னைப் பொறுத்த வரையில் என் இலட்சியம் என்ன என்பதையும் உணர்த்தி விட்டார்.

நான் சிறிது நேரம்தான் சிந்தித்தேன், என் இலட்சியம் என்ன என்று! எதிரே மலைபோல் தோன்றிக்கொண்டிருக்கிறது உண்மை; அதைவிட்டு பூமிக்கு அடியிலேயா தோண்டிச் செல்ல வேண்டும், அதைத் தேடி? எனக்குப் புரிந்துவிட்டது என் இலட்சியம் என்னவென்று; அதே இலட்சியம்தான் இப்போது என்னை "போ...போ...போ...!" என்றும் ஓடஓட விரட்டியடிக்கிறது!

நான் எங்கே போகிறேன்? நாட்டின் உயிருக்கு! எனக்கு இந்த நகரம் எதற்காக? இங்கே குழி தோண்டி புதைக்கப்பட்டு விட்டதே மனிதத் தன்மை! இந்த நகரத்தின் மானத்தைக் காக்கும் கிராமங்கள்—அங்கே நிலவும் தூய்மை...அப்பப்பா! தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டு நகரம் நோக்கி ஓடிவரும் மக்களைக் கண்டு நான் பரிதாபப்படுகிறேன்; ஆனுல் அதேநேரம் அழவும் செய்கிறேன், தூய்மை நிலவும் கிராமங்களிலே துயரமும் வெறியாட்டம் போடுவது கண்டு!

✻ 10-ம் பக்கம் பார்க்க

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

அன்பரசன்; ச. குடியிருப்பு

(?) உங்களுடைய கட்சியின் பெயரை மாற்றிக் கொள்ளச் சம்மதிக்கிறீர்களா?

மாட்டோம்; ஆட்சியாளரின் அடக்கு முறையால் அழிவதாயிருந்தாலும் அந்தப் பெயருடனேயேதான் அழிவோம்!

அங்கப்பன்; மாயனூர்.

(?) தமிழ்நாடு எனப் பெயர் வைக்க ஆட்சேபிப்பவர்கள் 'தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி' என்று மட்டும் பெயர் வைக்கலாமா?

வெட்கங் கெட்டவர்கள் இதுவும் செய்வார்கள்; இன்னமும் செய்வார்கள்!

மு. தங்கமுத்து; இராம சமுத்திரம்

(?) திராவிடம் எப்போதுதான் பிரியுமோ?

உன்போன்றவர்கள் தொகை பெருகும்போது!

கோமதி நாயகம்; முகவை.

(?) நிதி அமைச்சரிடம் இதர செலவாகும் இலாக்காக்கள் இருக்கக்கூடாது என்று அண்ணா கூறியதற்கு சுப்ரமணியனார் என்ன பதில் கூறினார்?

அடுக்குச் சொல் பற்றியும், சினிமா நாடகம் பற்றியும் நினைவு வைத்துக் கொண்டிருந்த அவர் இதற்கு இன்னமும் பதில் சொல்ல வில்லை, நண்பரே!

ஏற்காடு தொகுதியில் மு. கருணாநிதி சுற்றுப்பயணம்

19-5-57	மாலை	4-30	கருப்பூர்
,,		6	மூக்கனூர்
,,		7	ஓமலூர்
,,		8-30	பூசாரிப்பட்டி
,,		9-30	காடையாம் பட்டி
20-5-57	காலை	8-30	வெள்ளாள குண்டம்
,,		9-30	சேஷன் சாவடி
,,		10-30	காரிபட்டி
,,		11-30	மின்னும் பள்ளி
	மாலை	5	அயோத்தியா பட்டினம்
,,		6-30	நீர்முள்ளிக் குட்டை
,,		8	அத்தனூர் பட்டி
,,		9	சிங்கபுரம்

தள்ளிவரும் தமிழ்நடை—அழகு
அள்ளிவரும் அமைப்போடு...

"வெள்ளி வீதி"

வருகிறது; மே திங்கள் 20-ம் நாள்!

மு. கருணாநிதி எழுதும்

"என்னைப் பற்றி..."

"விமர்சனத்திற்கு விமர்சனம்"

முதலிய சுவையான பகுதிகள்!

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

'வெள்ளி வீதி' 12 பி. ராமானுஜம் செட்டித் தெரு, சென்னை—6.

'சேவா ஸ்டேஜ்' நாடகக் கல்வி நிலையம்

சென்னை மாநில இசை நாடக சங்கத்தின் மான்யம் பெற்ற சேவா ஸ்டேஜ் நாடகக் கலைப் பயிற்சி வகுப்புகள் 1957 ஜூன் 30-ந் தேதியன்று தொடங்கி மூன்று மாதங்கள் (செப்டம்பர் 30-ந் தேதி வரை) நடைபெறும்.

பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் குறைந்த பட்சம் எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் படித்திருக்க வேண்டும். முன்பே நாடகக் கலையில் அனுபவம் பெற்றிருந்தால் அது விசேஷத் தகுதியாகக் கருதப்படும். மூன்று மாத பயிற்சிக்கும் மொத்த சம்பளக் கட்டணம் ரூபாய் ஐம்பது. தேர்ந்தெடுக்கப்படும் மாணவ மாணவிகள் நேர்முக பேட்டிக்கு வந்து போகவும், மற்றபடி இட சாப்பாடு வசதிகளுக்கும், அவரவர் சொந்தப் பொறுப்பில் ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

விண்ணப்ப பாரமும், பயிற்சி வகுப்புகள் பற்றிய இதர விவரங்களும் வேண்டுவோர், 4 அணா தபால் பில்லையுடன், செயலாளர், சேவா ஸ்டேஜ் நாடகக் கல்வி நிலையம், 20, தாண்டவராயன் தெரு, சென்னை—14 என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1957 ஜூன் மாதம் 10-ந் தேதி வரைதான் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

என். வி. ராஜாமணி
10—5—57.

விசித்திரக் கரு...

8-ம் பக்கத் தொடர்ச்சி

நெருப்பு கொழுந்துவிட்டெரிந்தது...ஊர் மக்கள் போய்விட்டார்கள்.

"வானம்பாடியே! மீளாத மோனத்தில் மூழ்கிவிட்ட மோகனமே! என்னென்ன எண்ணங்களால் மிதந்தாயோ, தண்ணீரிலே மிதப்பதற்குமுன்? காலத்தில் கை கொடுக்காத, கடைக்கண் பார்வை வீசாத இக் கயவனை எண்ணி எப்படிக் கதறினாயோ? உலகமறிந்த நானே நம்பவில்லை. ஊரார் எப்படி நம்பப்போகிறார்கள் என்று உயிரை மாய்த்துக் கொண்டாய்—என் உயிரில் கலந்துவிட்ட ஒளி முத்தே? பாவி நான் நேற்றே இச்செய்தியை படித்திருக்கக் கூடாதா? அல்லது நீதான் காலந்தாழ்த்தி இம் முடிவுக்கு வந்திருக்கக் கூடாதா?

"உன்கருவுக்கு காரணம் காண முயற்சித் திருப்பேனே... இயற்கை நம்மை சதி செய்துவிட்டது கண்ணே! நாம் இருவரும் ஒத்து வாழக்கூடாதென்று உன் வாழ்வை கொத்திக் கொண்டு போய்விட்டது..."—வாய் விட்டுப் புலம்பவில்லை தியாகு; அவன் உள்ளம் அப்படிப் புலம்பியது!

தெறித்து விழுந்த அந்த நெருப்புப் பொறிகளுக்கிடையே காலையில் அவன் படித்த செய்திப் பொறி சிதறியது...

"...உடலுறவில்லாமல் லாஸ் ஏஞ்சல்சில் ஒரு பெண்மணிக்கு குழந்தையொன்று பிறந்தது! ஒருவிவசாயத் தம்பதியின் மகளான இப்பெண்ணுக்கு இன்னும் திருமணமாகவில்லை. ஆனால் திடீரென்று உடலமைப்பில் மாறுதல் காணவே, பெற்றோர்கள் சந்தேகப்பட்டனர். ஆனால் மகள் பிடிவாதமாக எத்தீச் செயலிலும் ஈடுபடவில்லை என்று கூறியதால் இங்குள்ள விசேஷ மருத்துவரிடம் அழைத்து வந்தனர். தன்னுடைய மேற்பார்வையில் வைத்து நீண்ட ஆராய்ச்சியின் பயனாக ஒரு பேருண்மையைக் கண்டு பிடித்தார், அவர். அப்பெண் யாருடனும் உறவாடவில்லை என்பதைக் கண்டு பிடித்தார்! 'இப்பெண் அதன் தாயின் வயிற்றில் கருத்தறித்திருக்கும் போதே, இதனுடன் இன்னொரு குழந்தையும் சேர்ந்து இரட்டைப் பிள்ளையாக பிறந்திருக்க வேண்டும். ஆனால் சில சூழ்நிலை காரணங்களால் இரட்டை அணுக்களில், ஒரு உயிரணுதான் ('செல்') முழுவளர்ச்சியடைந்து குழந்தையாகியது. மறு அணுவோ வளர்ச்சியுறாமல், அக் குழந்தையின் சூல்பையில் தங்கிவிட்டது! குழந்தை வளர்ந்து பெரிய பெண்ணாகிவிட்ட இச் சமயத்தில் சூழ்நிலை சாதகமாக அமையவே, வளர்ந்த அவ்வணு கருவாகி, குழந்தையாக உருக் கொண்டுவிட்டது. குழந்தையை அறுவை முறையில்தான் வெளி எடுக்க வேண்டும்' என்று அபிப்பிராயப்பட்டார்..."

அத் தியாகச் சின்னத்தின் சிதையிலே வளர்த்த நெருப்பு, நீறுபூத்து சாம்பலாகிவிட்டது! ஆனால் தியாகுவின் உள்ளத்திலே வளர்ந்த நெருப்பு...?